பக்கங்கள்:-பத்து

**Registered as a News paper in Sri Lanka**

விலை ரூபா. 6:00

ஆசியா கண்டத்தில் முதலாம்
தரத் தொழிற்சாலையில்
இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

வலம்புரி
Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆவணி 30 | செவ்வாய்க்கிழமை | (16.09.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 271

# புலிகள் தயாரித்த திட்டவரைபில்
# காவல்துறை - நிலம் - நிதி அதிகாரம்
# முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது!
## ஆங்கில ஊடகங்கள் தகவல்

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகளினால் இலங்கை அரசிடம் சமர்ப்பிக்கப் படவுள்ள இடைக்கால நிர்வாக சபை தொடர்பான திட்டவரைபில் தமது காவல்துறையை அங்கீகரிக்குமாறும், நிலம், மற்றும் நிதி சம்பந்தபபட்ட கட்டுப்பாடுகளைத் தம்மிடம் தருமாறும் புலிகள் கோரியிருப்பதாக கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங்கில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

இலங்கை அரசினால் மூன்றாவது தடவையாக விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை தொடர்பான திட்ட வரைபிற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் பிரான்ஸின் தலைநகர் பரிஸில் தயாரித்த இடைக்கால நிர்வாக சபை திட்டவரைபிலேயே தமது காவல்துறையை அங்கீகரிக்குமாறும், நிலம், நிதி சம்பந்தப்பட்ட கட்டுப்பாடுகளைத் தம்மிடம் தருமாறும் விடுதலைப் புலிகள்

(10ம் பக்கம் பார்க்க)



தியாக தீபம் லெப்ரினனட் கேணல் திலீபனுக்கு தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் வணக்கம் செலுத்தி நினைவு நாள் நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார்.

சிறபபாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் இந் நிகழ்வு இடம் பெற்றது. அங்கு தலைவர் வே.பிரபாகரன் ஈகச் சுடர் ஏற்றி மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினார். இந் நிகழ்வில் தளபதிகள் மற்றும் துறை சார்பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து கொண்டனர். (ந-5)

## தியாகி திலீபனின் நினைவு நாள் நிகழ்வுகள் நேற்று ஆரம்பமாகின

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் லெப்டினன்ட் கேணல் திலீபனின் 16-ம் ஆண்டு நினைவு தினம் தமிழர் தாயகப் பகுதிகளில் நேற்று உணர்வு பூர்வமாக ஆரம்பமாகின.நினைவு தின ஆரம்ப நாளான நேற்று தேசியக் கொடியேற்றலுடன் நினைவு நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.

குடாநாட்டில் அரசியல் துறைக் கோட்டங்கள், பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள், பொது நிறுவனங்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், மாவீரர் துயிலும் இல்லங்கள், சனசமூக நிலையங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் நினைவு தின ஆரம்ப நாள் நிகழ்வுகள் இடம் பெற்றன.

அலங்கரிக்கப்படட் பந்தல்களில் திருவுருவப் படம் வைக்கப்பட்டு தேசியக் கொடியேற்றல், ஈகச் சுடர் ஏற்றல், மலர் வணக்க நிகழ்வுகளுடன் நினைவுரைகளும் இடம பெற்றன. பிரதான நிகழ்வுகள் நல்லூரில் திலீபனின் நினைவுத் தூபி அமைந்துள்ள இடத்தில் இடம் பெற்றது. (த)

## மட்டு. மாவட்டத்தில் இரு வேறு கொலைகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 24 மணி நேரத்தினுள் இரு வேறு படுகொலைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

ஈ.பி.ஆர்.எல்.எவ்.வரதர் அணி முன்னாள் உறுப்பினர் ஒருவரும், ராசிக் குழுவின் முன்னாள் உறுப்பினர் ஒருவருமே இவ்வாறு 24 மணி நேரத்தில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் மீன்பிடித் தொழில் நிமித்தம் முகத்துவாரம் சென்று கொண்டிருந்த ராசிக் குழுவின் முன்னாள் உறுப்பினரான சபாரத்தினம் சௌந்தரநாயகம் (வயது32) வெளிச்சவீடு பகுதியில் வைத்து இனம் தெரியாதோரால் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்.

இதனைத் தடுக்க முற்பட்ட இவரது உதவியாளரான சிதம்பரப்பிள்ளை குலேந்திரகுமார்(வயது24)

(10ம் பக்கம் பார்க்க)

## அகாஷி-ஜனாதிபதி நேற்று சந்திப்பு

(கொழும்பு)

யப்பான் விசேட தூதுவர் யசூஷி அகாஷி நேற்று மாலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இச்சந்திப்பின் போது யப்பானிய விசேட தூதுவர், அரசு-புலிகள் சமாதான முயற்சிகள் குறித்தும் டோக்கியோ நிதி உதவி வழங்கும் மாநாடு, மற்றும் கொழும்பில் அண்மையில் நடைபெற்ற மீளாய்வு மாநாடு குறித்தும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு விளக்கிக் கூறியுள்ளார். (வ)

## புலிகள்-இராணுவம் யாழில் சந்திப்பு

(திருநெல்வேலி)

விடுதலைப் புலிகளிற்கும், இராணுவத்தினருக்குமிடையிலான முக்கிய சந்திப்பொன்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் நேற்று நண்பகல் நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலை குறித்து விரிவாக ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.இச்சந்திப்பு மாதாந்தம் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-43)

## கனடியத் தூதுவர் வன்னி செல்வார்

(கிளிநொச்சி)

இலங்கைக்கான கனடியத் தூதுவர் எதிர்வரும் 18ந் திகதி கிளிநொச்சிக்குச் சென்று தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்தவுள்ளார். விடுதலைப் புலிகளினால் அரசிடம் சமர்ப்பிக்கப் படவுள்ள இடைக்காலத் திட்ட வரைபு மற்றும் இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன என்பது தொடர்பாகவும் அவர் கலந்துரையாடவுள்ளார். (த)

## ஹெல்கீசன் - எரிக்சோல் நாளை கொழும்பு வருவர்!

(கொழும்பு)

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசனும், சிறப்புத் தூதுவர் எரிக்சோல் ஹெய்மும் நாளை கொழும்பு வரவுள்ளார்கள்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பித்து வைக்கும் நோக்குடன் கொழும்புக்கு வருகைதரும் விடார்ஹெல்கீசனும், தூதுவர் எரிக்சோல் ஹெய்மும் எதிர் வரும் வெள்ளிக்கிழமை வரை இலங்கையில் தங்கியிருப்பார்கள்.

இவர்கள் இருவரும் கொழும்பில் தங்கிருக்கும் போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை

(10ம் பக்கம் பார்க்க)

## வட அயர்லாந்து மாநாட்டில் தமிழ்ச்செல்வன் பங்குபற்றுவார்!

(கொழும்பு)

நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன்,வட அயர்லாந்தில் இடம்பெறவுள்ள சமாதான மாநாடு ஒன்றில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கலந்து கொள்ளவுள்ளார்.

இம்மாதம் 26, 27-ந் திகதிகளில் இடம்பெறவுள்ள இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, சு.ப.தமிழ்ச்செல்வன் விரைவில் வட அயர்லாந்துக்குப் பயணமாவுள்ளார்.இதேசமயம், வட அயர்லாந்துக்கான அவரது பயணத்துக்கு முன்னதாக, அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை தொடர்பான தமது மாற்று யோசனைகளை விடுதலைப்

(10ம் பக்கம் பார்க்க)

## சுகாதார ஊழியர்களின் லீவுகள் நேற்று நள்ளிரவு முதல் ரத்து
### சுகாதார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

நாடு பூராவும் கடமையாற்றும் சுகாதார சேவை ஊழியர்கள் அனைவரது லீவுகளையும் சுகாதார அமைச்சு நேற்று நள்ளிரவு முதல் ரத்துச் செய்துள்ளது.

சம்பள முரண்பாடுகளை அடிப்படையாக வைத்து சுகாதார சேவையில் நெருக்கடி நிலை ஒன்றை ஏற்படுத்துவதற்கு சிலதொழிற் சங்கங்கள் திட்டமிட்டுள்ளதை அடுத்தே சுகாதார சேவை ஊழியர்கள் அனைவரதும் லீவுகள் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சர் தயாரத்தின தெரிவித்துள்ளார்.

இதேவேளை சுகாதார சேவை ஊழியர்களின் பிரச்சினைகள் குறித்து தொழிற் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப் போவதாகவும், இது தொடர்பாக இன்று திறைசேரி அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளதாகவும், அமைச்சர் தயாரத்தினா மேலும் தெரிவித்துள்ளார். (வ)

# சிறைச்சாலை உத்தியோகத்தர் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை மேலும் 200ஆல் அதிகரிப்பதற்கு சிறைச்சாலைத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதற்கான அனுமதியினை அரசாங்கம் வழங்கி இருப்பதாகச் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் புறாம் மர்சூத் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகளில் தற்போது நிலவும் 300 வெற்றிடங்களை நிரப்பும்பொருட்டு அமைச்சரவைக்குப் பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

மேலும், இவ் வெற்றிடங்களை நிரப்பும் போது மாவட்டரீதியில் மேற்கொள்ளப்படும் இடமாற்றங்களைத் தவிர்க்கும் நோக்குடன், சிறைச்சாலைகளுக்கு அருகில் உள்ள இளைஞர்களைச் சேர்த்துக் கொள்வதற்கும் திணைக்களம் தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-61)

# 45 வர்த்தகப் பிரதிநிதிகளுடன் கருணாநாயக்க பேச்சு

(கொழும்பு)

மெக்ஸிக்கோவில் நடைபெற்ற சர்வதேச வர்த்தக நாடுகளின் 12 ஆவது மாநாட்டில் வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க 45நாடுகளின் வர்த்தகப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இப் பேச்சுவார்த்தையின் போது இவ் நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையில் வர்த்தக உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது சம்பந்தமாக ஆராயப்பட்டன.

தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் சமாதானச் சூழலை அடுத்து இவ் நாடுகளில் பெரும்பாலானவை வர்த்தக உடன்படிக்கைகளில் கைச்சாத்திடவும் முதலீடு செய்யவும் முன்வந்துள்ளன என அமைச்சின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

(தி-60)

## சுகாதார ஊழியர் போராட்டத்தில்

# பதில் கடமையில் ஈடுபடுவோரை தடுத்துநிறுத்தக் கோரிக்கை

(கொழும்பு)

சுகாதாரத்துறை ஊழியர்கள் மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டால், இராணுவம் மற்றும் பொலிஸாரை வைத்தியசாலைக் கடமைகளில் ஈடுபடுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இவ் ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளுக்குத் தீர்வுகாண வழங்கப்பட்ட கால அவகாசம் நேற்றுடன் முடிவடைந்துள்ளதால் இவர்கள் மீண்டும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக செய்திகள் வெளியாகியுள்ளமையை அடுத்தே அரசாங்கம் இத் தீர்மானததினை எடுத்துள்ளது.

நோயாளர்களின் பாதிப்பைத் தடுக்கும்வகையில் அவசர சேவைகளின் நிமித்தம் இராணுவத்தினரையும், பொலிஸாரையும் கடமையில் ஈடுபடுத்த அரசு தீர்மானித்துள்ளதாக சுகாதார அமைச்சர் பி.தயாரட்ண தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரசாங்கத்தின் இம் முயற்சிகளை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறு சுகாதார சேவைகள் தொழிற்சங்கச் சம்மேளனம், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கடிதமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

அக் கடிதத்தில் வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிலையங்களில் முப்படையினரும் பொலிஸாரும் அனுமதிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

இத்தகைய நடவடிக்கைகள் சுகாதாரத்துறையில் பெரும் சிக்கல்களை ஏற்படுத்தும்என அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-61)

## பொலிஸ் ஜீப

# ஆட்டோவை மோதியது அதன் சாரதி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிச் சந்திப்பகுதியில் நேற்றைய தினம் பொலிஸாரின் ஜீப் வாகனமொன்று எதிரே வந்து கொண்டிருந்த ஆட்டோ ஒன்றுடன் மோதியதில் ஆட்டோச் சாரதி பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஏழாலையைச் சேர்ந்த பரமேஸ்வரன் பகீரதன் (வயது 24) என்ற ஆட்டோச் சாரதியே தனது வாகனத்தை திருநெல்வேலி ஊடாக செலுத்திக் கொண்டிருந்தபோது விபத்துக்குள்ளானதாகத் தெரியவருகிறது.

திருநெல்வேலிச் சந்திப் பகுதியை ஆட்டோ நெருங்கிக் கொண்டிருந்த சமயம் எதிரே வந்த துவிச்சக்கர வண்டியை ஆட்டோ விலத்த முற்பட்ட வேளையில் பொலிஸாரின் வாகனத்துடன் மோதி ஆட்டோ பெரும் சேதத்துக்கு உள்ளாகியுள்ளது.

மேற்படி நபர் போலியோ நோயினால் கால்கள் இரண்டும் பாதிக்கப்பட்ட நிலையிலும் தனது விடாமுயற்சியால் ஆட்டோ ஓட்டி வந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-7)

# நாடளாவிய ரீதியில் இதுவரை 35 வேலைநிறுத்தப் போராட்டங்கள்

## தொழில் அமைச்சர் அறிவிப்பு


(கொழும்பு)

தொழில் வழங்குநரின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக தொழில வேலைவாய்ப்பு அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

1998ஆம் ஆண்டு தொழில் நீதிமன்றங்களில் 23ஆயிரம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. ஆனால். இவ்வருடம் அது 4 ஆயிரமாகக் குறைந்துள்ளது.

அத்துடன், 1999ஆம் ஆண்டு நாடளாவிய ரீதியில் 120 வேலைநிறுத்தப் போராட்டங்கள் மேற்கொள கொள்ளப்பட்டன. அதேசமயம் இவ் வருடம் முதல் கடந்த ஆகஸ்ட் மாதம்வரை 35 வேலைநிறுத்தப் போராட்டங்களே மேற்கொள்ளப்பட்டதாகப் பதிவுகள் கூறுகின்றன. (தி-60)

# பிசுபிசித்துப்போனது இராணுவ ஆட்சேர்ப்பு




உள்நாட்டலுவல்கள் மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு
வடக்கு கிழக்கு மாகாண சபை

# வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆஅவ" கடன் இல.1846 - SRI(SF)

## திட்ட முகாமைத்துவப் பிரிவு - திருகோணமலை மாவட்டம் மாவட்ட திட்டபொறியியலாளர்

திருகோணமலையிலுள்ள வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்ட முகாமைத்துவப்படுத்தும் பிரிவில் உள்ள பொறியியலாளர் பதவிக்கான வெற்றிடத்தினை நிரப்புவதற்கு இலங்கைப் பிரசையிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்கும் போது விண்ணப்பதாரர் 25 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். 45 வயதுக்கு குறைந்தோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பதாரிகள் இலங்கைப் பொறியியலாளர் (சிவில்) பட்டதாரியாகவும், 5வருட அனுபவத்தையுடையவராகவும் இருத்தல் வேண்டும். நியமனங்கள் திருப்திகரமான சேவையின் அடிப்படையில் வருடாந்தம் புதுப்பிக்கக் கூடிய ஒரு வருட ஒப்பந்த அடிப்படையிலாகும். தேவையேற்படின் அவ்வொப்பந்தம் திருப்தியினடிப்படையில் மேலும் நீடிக்கப்படும்.

### விண்ணப்பிக்கும் முறை -

விண்ணப்பதாரிகள் அவர்களது கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள், பிறந்த திகதி, முன்னைய தொழில் விபரங்கள், முன்னைய அனுபவம், இரண்டு சான்று பகர்வோர்களின் பெயர்கள், முகவரிகள், சுயதரவுகள், மற்றும் சான்றிதழ்களின் பிரதிகள் உட்பட விண்ணப்பத்தினைத் தயாரித்து அனுப்ப வேண்டும். விண்ணப்பம் பதிவுத் தபால் மூலம் 30.09.2003ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் திட்டப் பணிப்பாளர், வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் **(NECORD)** இல. 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தபால் உறையின் மேல் மூலையில் குறிப்பிடப்பட வேண்டும். அரச திணைக்களம்/ அரச கூட்டுத்தாபனங்கள்/ சபைகள் என்பவற்றில் சேவையிலிருப்போர் அவர்களது நிறுவனத் தலைவரினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

### தெரிவு செய்யப்படும் முறை

நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

### சம்பளம்


அரசாங்க சேவையில் உள்ள இத்தகைய பதவிகளுக்கு வழங்கப்படும் சம்பளத்துடன் செயலாற்றுதலையும் திறமையையும் கவனத்தில் கொண்டு 26.12.2000ந் திகதிய 10ம் இலக்க முகாமைத்துவ சுற்று நிருபத்திற்கேற்ப சம்பளத்தின் 50% க்கு மேற்படாத தொகையும் வழங்கப்படும்.


### தகைமைகள்

- திட்டத்திற்குத் தேவையான தொழில்நுட்பத் தகவல்களை வழங்குதலும் மாவட்ட பிரதித் திட்டப்பணிப்பாளருக்கு அறிவுரை கூறுதலும்.
- திட்ட முகாமைத்துவப் பிரிவுக்கு கிடைக்கப்பெறும் திட்ட அறிக்கைகளை பகுப்பாய்வு செய்வதற்கான தகுதி.
- திட்டங்களை திறமையாக செயல்படுத்துவதிலும் கண்காணித்தலிலும் உள்ள ஆற்றல்களும் வேலைகளையும், சேவைகளையும், வழங்கல்களையும் பெற்றுக் கொள்ளுவது சம்பந்தமான அடிப்படை அறிவு
- செயற்படுத்தலில் ஏற்படும் பிரச்சினைகளை பகுப்பாயும் திறமை.

**த.லங்காநேசன்**
திட்டப்பணிப்பாளர்,
நீக்கோட் திட்ட காரியாலயம்
140,மின்சார நிலைய வீதி,
திருகோணமலை.

[C/6636]





# விளையாட்டுச் செய்திகள்

## இலங்கை வீரர்கள் முரட்டுத்தனம்

## வெற்றி வாய்ப்புப் பறிபோனது

### கால்பந்தாட்ட சம்மேளனம் ஆதங்கம்

கொங்கொங்கில் நடைபெற்ற 23 வயதிற்குட்பட்ட உலகக் கோப்பை கால்பந்தாட்டப் போட்டியின் தகுதி காண் போட்டியில் இலங்கை முதல் சுற்றின் முதலாவது போட்டியில் கொங்கொங் அணியிடம் தோற்றுள்ளது.

இந்தப் போட்டியில் இலங்கை அணியை கொங்கொங் அணியானது 1:0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி கொண்டுள்ளது. இடைவேளையின் பின்னர் இரண்டாவது நிமிடத்தில் கொங்கொங் அணியினர் போட்ட கோல் வெற்றிக் கோலாக அமைந்தது.

இந்தப் போட்டியில் தோற்றதற்கு இலங்கை அணி வீரர்கள் மிக முரட்டுத்தனமாக விளையாடியதே காரணம் என அங்கு சென்றுள்ள இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் பொருளாளர் ரஞ்சித் ரொட்றிக்கோ தெரிவித்துள்துள்ளார்.

போட்டியின் 70வது நிமிடம் இலங்கை வீரர் ஒருவர் மத்தியஸ்தரினால் சிவப்பு அட்டை காட்டப்பட்டு அரங்கில் இருந்து வெளியேற்றப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது போட்டி நாளை கொழும்பு சுகதாச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் இரண்டு கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்றால் மாத்திரமே இரண்டாவது சுற்றுப் போட்டிகளில் விளையாட இலங்கை அணிக்கு சந்தர்ப்பம் கிடைக்குமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-68)

## பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தும் பணியில் தென் ஆபிரிக்க அணி

தென்னாபிரிக்க கிரிக்கெற அணி பாகிஸ்தானுக்கான விஜயத்தினை மேற்கொள்ள முன்னர் பாகிஸ்தானுக்கு விசேட பாதுகாப்புக்குழு ஒன்றை அனுப்பி வைப்பதற்கு அந்நாட்டு ஐக்கிய கிரிக்கெற் சபை தீர்மானித்துள்ளது.

இந்த மாத இறுதிப்பகுதியில் தென்னாபிரிக்க கிரிக்கெற் அணி பாகிஸ்தானுக்கு கிரிக்கெற் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

அதற்கு முன்னதாக இந்த விசேட நிபுணர் குழுவை பாகிஸ்தான் அனுப்பிவைக்க எண்ணியுள்ளதாக தென்னாபிரிக்க ஐக்கிய கிரிக்கெற் சபையின் அங்கீகாரம் கிடைத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆப்கானிஸ்தானின் எல்லைப்புறங்களில் உள்ள பாகிஸ்தான் நகரங்களில் நடைபெறும் போட்டிகளில் கலந்துகொள்ள வேண்டாம் என்று தென்னாபிரிக்க நாட்டு வெளிவிவகார அமைச்சர் தனது அணியைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இம் மாதம் 24ஆம் திகதி முதல் ஒக்டோபர் 27ஆம் திகதிவரை 3 டெஸ்ட் கிரிக்கெற் போட்டிகளிலும் 4 சர்வதேச ஒருநாள் கிரிக்கெற் போட்டிகளிலும் பாகிஸ்தானை எதிர்த்துத் தென்னாபிரிக்க அணி விளையாடவுள்ளது. (உ-68)

## முறையற்ற "பிடி"காரணமாக

## பாகிஸ்தான் வீரருக்குத் தடை

பங்களாதேஷ் அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியின் போது தவறான முறையில் பிடி ஒன்றை எடுத்து பங்களாதேஷ் வீரரை ஆட்மிழக்கச் செய்தார் எனக் குற்றம் சாட்டப்பட்ட பாகிஸ்தான் கிரிக்கெற் அணித்தலைவர் றஸ்சீவ் லத்தீப்பிற்கு 5சர்வதேச ஒருநாள் கிரிக்கெற் போட்டிகளில் விளையாடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் அணிக்கெதிரான 5ஒருநாள சர்வதேச போட்டித் தொடரில் லத்தீப் ஆட முடியாதென அறிவித்துள்ள பாகிஸதான் கிரிக்கெற் கட்டுப்பாட்டுச்சபை இந்த ஐந்து ஒரு நாள் போட்டித் தொடருக்குமான பாகிஸ்தான் அணியின் தலைவராக இன்சமாம் உல் ஹக்கை நியமித்திருப பதும் குறிப்பிடத்தக்கது. (உ-68)

## பாகிஸ்தானில் விளையாட

## நியூசிலாந்து இணக்கம்

பாகிஸ்தானுக்கெதிரான சர்வதேச ஒருநாள் கிரிக்கெற் தொடரில் விளையாடுவதற்கு நியூசிலாந்து இணக்கம் தெரிவித்துள்ளது.

போட்டி அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விடயங்களில் மாற்றங்கள் செய்யப்படவேண்டுமென நியூசிலாந்து கேட்டுக்கொண்டதற்கமைய மாற்றங்கள் செய்யப்பட்டதை அடுத்து, நியூசிலாந்து இவ் இணக்கப்பாட்டை வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தானின் கராச்சியில் நியூசிலாந்து அணியானது தங்கியிருந்த விடுதிக்கு முன்பாகக் கடந்த மேமாதம் இடம்பெற்ற குண்டுவெடிப்புக் காரணமாக நியூசிலாந்து உடனடியாகத் தனது சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு நாடுதிரும்பியிருந்தமை அறிந்ததே.

இதன் காரணமாக விளையாடாமல் கைவிடப்பட்ட இரண்டு சர்வதேச ஒருநாள் போட்டிகளையும் மேலதிகமாக அடுத்த சுற்றுப் பயணத்தின் போது விளையாடுவதாக நியூசிலாந்து கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபை இணங்கியுள்ளது.

இதன் பிரகாரம் நவம்பர்மாதம் 10ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஐந்து ஒரு நாள் சர்வதேச கிரிக்கெற் போட்டிகளில் நியூசிலாந்து பாகிஸ்தானை எதிர்த்து விளையாடவுள்ளது. இப்போட்டிகள் லாகூர், ராவல்பிண்டி, பைசலாபாத் ஆகிய நகரங்களில் இடம்பெறவிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-68)

## டென்னிஸ் வீராங்கனைகள்

## வில்லியம் சகோதரிகளின் மூத்த சகோதரி சுட்டுக்கொலை

டென்னிஸ் வீராங்கனைகள் வீனஸ் வில்லியம்ஸ், ஷெரினா வில்லியம்ஸ் சகோதரிகளின் மூத்த சகோதரியான யடுண்டெப்ரைஸ் (வயது 31) லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள அவரது வீட்டில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

லொஸ் ஏஞ்சல்ஸ் நகரின் அருகேயுள்ள காம்ப்டன் மாவட்டத்தின் தெற்குப் பகுதியில் உள்ள டார்சோ என்னுமிடத்தில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்த மாவட்டம் வறுமைக்கும் வன்முறைக்கும் பெயர் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

தனது வீட்டில் இருந்தபோது 3 மர்ம மனிதர்களால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். எனினும், பொலிஸார் இதுவரை இக்கொலை தொடர்பாக எவரையும் கைதுசெய்ய வில்லை.

யடுண்டெப்ரைஸ் தாதியாகக் கடமையாற்றும் நிர்வாக ஆலோசகராகப் பிரபலம் பெற்றிருந்தார்.

தனது சகோதரிகள் வீனஸ் வில்லியம்ஸ், ஷெரினா வில்லியம்ஸ ஆகியோருடன் இவரும் டென்னிஸ் மைதானங்களுக்கு சமுகமளித்து வருவது குறிப்பிடத்தக்கது. (பி)

## இந்திய- பாகிஸ்தான் நாடுகளின் தயவை நாடுகிறது ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தானின் கிரிக்கெற் வளர்ச்சிக்கு இந்தியாவும் பாகிஸ்தானும் உதவ வேண்டும் என்று ஆப்கானிஸ்தான் கிரிக்கெற் சம்மேளனம் கேட்டுள்ளது.

பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆப்கானிஸ்தானின் 19 வயதிற்குட்பட்ட கிரிக்கெற் அணியானது அங்கு தற்சமயம் போட்டிகளில் பங்குபற்றிவரும் நிலையிலேயே இந்தக் கோரிக்கையை ஆப்கானிஸ்தான் வெளியிட்டுள்ளது.

இந்தியாவும் பாகிஸ்தானும் கூடுதலான போட்டிகளில எமது அணி வீரர்கள் விளையாடச் சந்தர்ப்பம் வழங்குவதன் மூலம் எதிர்காலத்தில் ஆப்கானிஸ்தான் கிரிக்கெற் அணியும் உலகஅரங்கில் பிரகாசிக்க முடியும் என்று அந் நாட்டு கிரிக்கெற் சம்மேளனம் தெரிவித்துள்ளது. (உ-68)

## தியாகி திலீபனின் நினைவகலா நாட்கள்



### உன் காலடிக்கு ஈடாமோ?

வெங் கொடுமைச் சாக்காட்டை
விரும்பி மனம் ஏற்றவனே!
துங்கத் தமி ழினத்தைத்
தலையினிலே சுமந்தவனே!

விடுதலை வேட்கை தன்னை
விளை நிலமாய்க் கொண்டவனே!
சுடு கலன்கள் மத்தியிலும்
சுதந் திரத்தைக் காத்தவனே!

வல்லரசே உனைக்கண்டு
வாயடைத்துப் போன தையா!
வல்லமைசேர் காந்திய முன்
காலடியில் வீழ்ந்த தையா!

உண்ணா விரத மதால்
உயர்ந்திட்ட தேச மது
கண்ணே திலீபா! உன்
காலடிக்கு ஈ டாமோ?

தென்நல்லை 'கூத்தாடி'

## இரவுநேரக் காவலாளி

## காலையில் பிணமாக மீட்பு

(கொழும்புத்துறை)

யாழ்.பற்றீசியன் தொழிற் பயிற்சி நிலையத்தில் இரவு நேரம் காவலக் கடமையில் ஈடுபட்டிருந்த காவலாளி மறுநாள் காலையில் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டார்.

யாழ்.பற்றீசியன் தொழிற் பயிற்சி நிலையத்தில் பகல் வேளையில் வெல்டிங் தொழிலும் இரவில் காவல கடமையும் செய்து வருபவரான ஏழு பிள்ளைகளின் தந்தையான மரியான் தெய்வேந்திரம் (வயது 55)என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

மாரடைப்பு நோயுள்ள மேற்படி நபர் சம்பவ தினத்திற்கு முதல் நாள் நெஞ்சுவலி ஏற்பட்டு வைத்திய சாலையில் மருந்து எடுத்துள்ள நிலையில் இரவு காவல் கடமைக்கு சமுகமளித்திருந்தார். மறுநாள் காலையே இவரது உயிரற்ற உடல பயிற்சிநிலைய வாயிலில் இருப்பதை அப்பகுதிமக்கள் கண்ணுற்றதாகத் தெரியவருகிறது.

மேற்படி நபர் மாரடைப்பு ஏற்பட்டு இறந்திருக்கலாம் என நம்பப்படும் அதேவேளை அவரது உடல் கிடந்த இடத்தில், நிலத்தில் இரத்தக்கறையும் உடல் உராய்வுக்காயங்களும காணப பட்டதாகத் தெரியவருகிறது. (உ-51)

## ரெலவ்சன் தமிழ்ச்செல்வன்

## இன்று கிளிநொச்சியில் சந்திப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும், கண்காணிப்புக்குழுத்தலைவர் ட்ரைவ் கெவ்ரெல்சனுக்கும் இடையே இன்று காலை 11.00 மணியளவில் கிளிநொச்சி சமாதானச் செயலகத்தில் சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பின்போது திருகோணமலை குரங்குபாஞ்சான் குள முகாம குறித்த நிலைப்பாட்டை விடுதலைப்புலிகள் ரெலவ்சனுக்கு மீண்டும் விளக்கவுள்ளனர் எனத் தெரிய வருகிறது.

இம்முகாம் விவகாரம் தொடர்பாக ஏற்கனவே இவ்விருவருக்கும் இடையே சந்திப்பு இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (தி-61)

## பாடசாலை சென்ற மாணவனைக் காணோம்

### பெற்றோர் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

பாடசாலைக்குச் சென்ற தமது பிள்ளை வீடு திரும்பாதமை குறித்து பெற்றோரால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலு வலகத்தில் நேற்று முறைப்பாடு ஒன்று செயயப்பட்டுள்ளது.

கடந்த 11ஆம் திகதி வியாழக் கிழமை காலை வீட்டில் இருந்து பாடசாலைக்குப் புறப்பட்ட சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவனான சாவகச்சேரி டச்சு வீதியைச்சேர்ந்த மணிவண்ணன் ஜெயஜோதித (வயது 14) என்பவரே நேற்று மேற்படி முறைப்பாட்டைச் செய்யும்வரை வீடு திரும்ப வில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-4)

# பிரிட்டனில் யுரேனியம் திருட்டு நாடு முழுவதும் உஷார் நிலை

## தீவிரவாதிகள் அனர்த்தம் விளைவிக்கலாம் என அச்சம்

(லண்டன்)

**பிரிட்டனில் 15 கிலோ யுரேனியம் திருட்டுப் போயுள்ளதையடுத்து நாடு முழுவதும் பொலிஸார் உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.**

**தீவிரவாத இயக்கங்களின் கையில் இது கிடைத்து வடுமானால் பெரும் அனர்த்தம் ஏற்படலாமென அதிகாரிகள் அஞ்சுகின்றனர்.**

இங்கிலாந்தில் பர்.'.பீளிட் என்ற இடத்தில் நிறுவனம் ஒன்றிலிருந்து 15 கிலோ யுரேனியம் திருடப்பட்டுள்ளது.இதையடுத்து நாடு முழுவதும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது போன்று மிகப் பெரிய அளவில் இங்கிலாந்தில் யுரேனியம் திருட்டுப் போவது இதுதான் முதல் முறை.

திருட்டுப்போன இந்த யுரேனியத்தைக் கொண்டு குண்டு தயாரித்து நாட்டில் பெரும் சேதத்தை உண்டாக்க முடியும் என்பதால் நாடு முழுவதும் உஷார் படுத்தப்பட்டுள்ளது என்று சண்டே டைம்ஸ் இதழ் தெரிவிக்கிறது.

இந்த திருட்டுத் தொடர்பாக நாடு முழுவதும் உள்ள காவல் நிலையங்கள் ஸ்கொட்லாந்து யார்ட்டின் சிறப்புப் பிரிவினருக்கு தகவல் அளிக்கப்பட்டு அவர்களும் உஷார் படுத்தப்பட்டுள்ளனர். (பி)

# யு.எஸ். பிலிப்பைன்ஸ் ராணுவ கூட்டுப் பயிற்சி

(வாஷிங்டன்)

அமெரிக்கா,பிலிப்பைன்ஸ் நாடுகளின் ராணுவத்தினர் கூட்டுப்பயிற்சி நடவடிக்கையொன்றில் ஈடுபடவுள்ளனர்.

இந்தப் பயிற்சி நடவடிக்கையின் பொருட்டு பிலிப்பைன்ஸின் சுபீக் கடற்படைத் தளத்திற்கு ஆயிரத்து 500அமெரிக்க கடற்படை வீரர்கள் நேற்று முன்தினம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

கமினிஸ விடுதலைப் போராட்டக் குழுக்கள்,இஸ்லாமிய பிரிவினவாத இயக்கங்கள் என்பவற்றிற்கு எதிரான ராணுவ நடவடிக்கைகளுக்கு உதவும் முகமாகவே அமெரிக்க மற்றும் பிலிப்பைன்ஸ் ராணுவத்தினருக்கு இந்தப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

உலக பயங்கரவாத ஒழிப்பு தொடர்பாக அமெரிக்க அதிபர் ஜோர்ச் டபிள்யு புஷ் அடுத்தமாதம் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி புளோரியா மெகாபால அரோயோவுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ள நிலையிலேயே இந்தப் பயிற்சி நடவடிக்கை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (பி-2)

# யூரோ நாணயத்தை சுவீடன் நிராகரித்தது

(ஸ்டாக்ஹோம்)

யூரோ நாணயத்தை சுவீடனில் ஏற்பதா இல்லையா என்பது பற்றி நேற்று முன்தினம் அந்நாட்டில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் அந்நாட்டின் பெரும்பான்மையான மக்கள் அதனை நிராகரித்து வாக்களித்துள்ளனர்.

யூரோ நாணயத்தை ஏற்குமாறு பிரசாரம் செய்த சுவீடன் வெளியுறவு அமைச்சர் அனாலிண்த் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டதால் யூரோ நாணயத்தைப் பெரும்பான்மையான மக்கள் ஏற்கலாம் என வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் தற்போது நடைபெற்று முடிந்த வாக்கெடுப்பின் முடிவுகளின் படி 56வீதமானவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.42 வீதமானவர்கள் ஆதரித்தும் ஏனைய 2 வீதத்தினர் எந்தக்கருத்தையும் வெளியிடவில்லையென்பதும் தெரியவந்துள்ளது. (பி-2)

# அயோத்தியில் தற்கொலை தாக்குதலுக்குத் திட்டம்

பாகிஸ்தானைச் சேர்ந்த லக்ஷர் இதொய்பா பயங்கரவாதிகள், அயோத்தியிலும் அமர்நாத் யாத்திரிகர்கள் மீதும் தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்தனர். ஆனால் இத்திட்டத்திற்காக இந்தியாவுக்குள் ஊடுருவிய பயங்கரவாதிகள் பாதுகாப்புப் படையினருடன் நடந்த சண்டையில் சுட்டுக் கொல்லப்பட்டதால் அவர்களது திட்டம் நிறைவேறவில்லை என்று இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் இந்து-முஸ்லிம்களிடையே கலவரத்தை ஏற்படுத்தும் நோக்கில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் இத்திட்டத்தை தீட்டியிருந்தனர் என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

காஷ்மீரில் கடந்த மாதம் லக்ஷர் இதொய்பா அமைப்பைச் சேர்ந்த பயங்கரவாதி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் லாப்டாப் கம்யூட்டரில் இருந்த தகவல்களைப் பார்த்த போது அவர்களது சதித் திட்டம் பற்றி தெரிய வந்தது.

பாபர் மசூதி இடிக்கப்பட்ட தினமான டிசம்பர் 6-ம் திகதியே அயோத்தியில் தாக்குதல் நடத்தத் பயங்கரவாதிகள் திட்டமிட்டிருந்தனர். ஆனால் தாக்குதலுக்கு அனுப்பப்பட்ட இருவர் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தெற்கு தில்லியில் துக்ளகாபாதில் பொலிசுடன் நடந்த மோதலில் சுட்டுக்கொல்லப்பட்டனர். (பி)

# ஒரு கிராமத்தை உலுக்கி வரும் பேய்க்கதையும் படமும்



திருச்சியில் கடந்த ஒருவாரமாக உலா வந்து கொண்டிருககும் பேய் காரணமாக தேவையற்ற பரபரப்பு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. திருச்சி மாவட்டத்தில் புளியஞ் சோலை என்ற மலையடிவாரப் பகுதியில் இரு கல்லூரி மாணவர்கள் (பெங்களுர் மற்றும் திருச்சி அருகே உள்ள மண்ணச்ச நல்லூரைச் சேர்ந்தவர்கள்) சுற்றுலாச் சென்றதாகவும் இரவு 7 மணியளவில் பெங்களுர் மாணவரை நிறக வைத்துப் படம் எடுத்த மண்ணிச்ச நல்லூர் மாணவர் அந்த இடத்திலேயே கீழே விழுந்து இறந்து விட்டதாகவும் கூறப்படுகின்றது.

சில நாட்கழித்து இந்த பிலிம்றோலை டெவலப் செய்யக் கொடுத்த பெங்களுர் மாணவர் பிரிண்டில் தனக்குப்பின்னால் பேய் நின்று கொண்டிருப்பதை பார்த்ததும் விழுந்து மூர்ச்சையாகி திருச்சியில் தனியார் மருத்துவ மனையில் கோமா நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும்,

இந்தப் படத்தை ஸ்ருடியோவில் பிரிண்ட் போட்ட பெண்ணும் அதிர்ச்சியில் மயங்கி வீழ்ந்து விட்டதாகவும் கதை பரவியுள்ளது. பள்ளி, கல்லூரிகளில் தொடங்கிய இந்தப் பேய்க்கதை செய்தித் தாள்களையும், மின் அணு ஊடகங்களையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டிருக்கின்றது. பள்ளி, கல்லூரிகளின் புகைப்பட நகலாகவும் சிலரிடம் புகைப்படமாகவும் இந்தப் பேயை உலாவவிட்டது - விடுவது யார், பிரிண்ட் போட்ட மாணவர் கோமா நிலைக்குப் போய் விட்ட நிலைக்குப் பிறகு படம் மட்டும் எவ்வாறு தானாக வெளியே புறப்பட்டது இப்படி பதில் அறிய முடியாத ஏராளமான கேள்விக் குவியலைப்பற்றி கவலைப்படாமல் பேய்ப்படக் கதை மட்டும் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கின்றது.இப் பேய்க் கதையால் புளியஞ்சோலை மக்கள் தான் இப்போது பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (பி)

# அரபாத்தை ஒழித்துக்கட்டும் இஸ்ரேலின் யோசனைக்கு அமெரிக்கா கடும் எதிர்ப்பு

(வாஷிங்டன்)

''பலஸ்தீன தலைவர் யஸீர் அரபாத்தை ஒழித்துக் கட்டுவதே ஒரேவழி'' என்று இஸ்ரேல் துணைப் பிரதமர் கூறிய கருத்தை அமெரிக்கா வன்மையாகக் கண்டித்துள்ளது.

இஸ்ரேல் துணைப்பிரதமர் எஹீத் வோல்ர்ட்டின் இந்த யோசனையை முற்றாகத் தாம் நிராகரிப்பதாகவும் அமெரிக்கா கூறியுள்ளது.

அரபாத்தை ஒழித்துக் கட்ட வேண்டும். அல்லது அவரை தனிமைப்படுதத வேண்டும் அப்போது தான் அமைதிப் பேச்சுக்கு வழி தோன்றும். தீவிரவாதிகளை தீர்த்துக்கட்டும் முயற்சியில் இஸ்ரேல் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. அரபாத்தும் ஒரு தீவிரவாதிதான் என்று எஹீத் வோலர்ட் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்தே அமெரிக்கா தனது கண்டனத்தையும் நிராகரிப்பையும் வெளியிட்டுள்ளது.

இஸ்ரேலிய துணைப் பிரதமரின் இந்த பேச்சு குறித்து கருத்து வெளியிட்ட பலஸ்தீன மூத்த அதிகாரி எரெகத் வோலர்ட்டின் சிந்தனையும் செயலும் போதைப் பொருள் கடத்தல் கும்பலின் சிந்தனைகளையும் செயல்களையும் போல் உள்ளது என்றார். (பி.2)

### அமைதித்திட்டத்துக்கு அரபாத் ஆதரவு

2005ஆம் ஆண்டு பலஸ்தீன நாடு ஒன்றை உருவாக்கும் அமெரிக்காவின் ''நோட்மாப்'' அமைதித் திட்டத்தை தாம் இன்னமும் ஆதரிப்பதாக பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத் கூறியுள்ளார்.

பலஸ்தீன அதிகார சபையை ரத்துச் செய்து சுதந்திரத்தை இல்லாமல் செய்யும் முயற்சியில் இஸ்ரேல் இறங்கி இருப்பதாக கூறியுள்ள அதிபர் அரபாத் சர்வதேச சமூகம் இஸ்ரேலியரைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அரபாத்தின் இருப்பிடத்தைச் சுற்றி ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் கூடிநின்று அவருக்காக உயிரையும் கொடுப்போம் என்று குரல் எழுப்பினார்கள் அவர்கள் மத்தியில் பேசிய அரபாத் தன்னை நாடு கடத்த இஸ்ரேலியர் எடுக்கும் முயற்சியை கண்டித்ததுடன் பலஸ்தீனத்தின் சுதந்திரத்தை இஸ்ரேலியர் தடுக்க முற்படுகிறார்கள் என்றும் சர்வதேச சமுகம் இதில் தலையிடவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (பி-2)

உலக தரிசனம்

### சிரியாவிடமிருந்தும் ஈராக்கிற்கு தண்ணீர்

(பக்தாத்)

சிரியா,துருக்கி ஆகிய நாடுகளிடமிருந்தும் நீரைப்பெற்றுக் கொள்ள ஈராக் திட்டமிட்டுள்ளது.

துருக்கியின் ரைகிரீஸ்,யூப்பிரட்டீஸ் நதிகளில் இருந்து தற்போது பெற்றுக் கொள்ளப்படும் நீர் போதாமல இருப்பதால் சிரியநாட்டு ஆறுகளில் உள்ள நீரையும் பெற்றுக் கொள்ள ஈராக் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக மூன்று நாடுகளுக்குமிடையில் பல பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (பி-2)

# 8 மாணவ தோழியரை கத்தியால் குத்திய ஆசிரிய மாணவி

(சீனா)

சீனாவில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாணவி ஒருவர் சக மாணவிகள் 8 பேரை கத்தியால் குத்தினார்.

தெற்கு சீனாவில் குவாங்சி சுவாங் பிராந்தியத்தில் சனிக்கிழமை இச் சம்பவம் நடந்துள்ளது என்று சீனப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

பழம் வெட்டும் கத்தியால் சக தோழிகள் 8 பேரையும் அந்தப் பெண் குத்தியுள்ளார். இதில் 3 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. 8பேரையும் குத்தியவர் யார் என்று பள்ளி நிர்வாகம் தெரிவிக்க மறுத்துவிட்டது. ஆனால் பொலிசார் சந்தேகத்தின் பேரில் ஒரு பெண்ணைக் கைது செய்துள்ளனர் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிசார் கைது செய்துள்ள பெண தற்கொலை செய்து கொள்ள முயன்றதன் காரணமாக, முன்னதாக ஓராண்டு இடைநிறுத்தம் செய்யப்படவிருந்தார் என்று பள்ளியைச் சேர்ந்த ஒரு மாணவி தெரிவித்துள்ளார். (பி)



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் சனிக்கிழமை நடைபெற்ற முதலாவது உலக நிதியுதவி தினம் என்ற தலைப்பிலான மாநாட்டில் பங்கேற்று விட்டுத் திரும்பும் ஆப்கன் பெண்கள். இந்த மாநாட்டுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. முந்தைய தலிபான் ஆட்சியில் இதுபோன்ற மாநாடுகளில் பெண்கள் பங்கேற்பது என்பதை நினைத்துக் கூடப்பார்க்க முடியாது.


# கல்விப்பொதுத் தராதரப்பத்திர (சா-த)
# மாதிரிப் பரீட்சை – 2003

பாடம் :-கணிதம்-I நேரம்:-1மணி

ஆக்கம் :-சி. டியூக் பல்குணன் லாலா ஆசிரியர்
(மல்லாகம் மகா வித்தியாலயம்)

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. $C^2$-5C-14 இன் ஒரு காரணி C+2 எனின், மறு காரணி எது?

2. 


$B\hat{O}C = 90°, ABCD$, ஒரு சதுரம் BO=4cm, CO=7cm, ABCD இன் பரப்பளவைக் காண்க.

3. தீர்க்க: $\frac{10}{\chi} + 3 = 8$

4. ரூ. 120, 000 விலையுள்ள மோட்டார் சைக்கிள் ஒன்றிற்காக பெறுமதி சேர் வரி (VAT) 20% எனின் வரியுடன் மோட்டார் சைக்கிள் வாங்கச் செலவு யாது?

5. $3\chi + 2\gamma = 7$ என்ற நேர்கோட்டில் (5,t) என்ற புள்ளி உள்ளது எனின் t இன் பெறுமானம் யாது?

6. v=u+ft இல் t இனை எழுவாயாக்குக?

7. 

$B\hat{A}C = 32°, A\hat{D}C = 87°$ எனின் (அ) $B\hat{D}C$ (ஆ) $A\hat{C}B$ என்பவற்றின் அளவுகளைக் கணிக்க?


8. 0.2 - 0.2 X 0.4 இனைச் சுருக்குக.

9. 
```
  23
+ 13
  40
```
இரு எண்களைக் கூட்டிய விதம் அருகேயுள்ளது. எண்களின் அடி யாது?

10. $(\sqrt{7}-2)(\sqrt{7}+2)$ இன் பெறுமானம் யாது?


11. சில தக்காளிச் செடிகளில் காணப்பட்ட காய்களின் எண்ணிக்கை பின்வருமாறு. 19, 6, 18, 8, 10, 17, 11, 12, 13, 15, 16
 (அ) 1ஆம் காலணை எது?
 (ஆ) இடையம் யாது?

12. சுருக்குக: (அ) $\frac{1}{C-3} \div \frac{1}{3-C}$
 (ஆ) $\frac{1}{C-3} - \frac{1}{3-C}$

13. 

$\hat{A} = 135°, \hat{C} = 45°$ எனின்,
 (அ) $\hat{B} + \hat{D}$ எவ்வளவு?
 (ஆ) நாற் ABCD எவ்வகையானது?


14. $\sin\chi° = 0.6$ எனின்
 (அ) $\cos\chi°$ (ஆ) $\tan\chi°$ என்பவற்றின் பெறுமானங்களைக் காண்க

15. உருவில்


 (அ) $A\hat{X}Y$ இற்கு சமனான கோணம் எது?
 (ஆ) BC இன் நீளம் யாது?

16. மாவு, சீனி, தேங்காய் என்பன நிறைப்படி 3:2:1என்ற விகிதப்படி கலந்து தயாரிக்கப்பட்ட பலகாரத்தில்
 (அ) மாவு என்ன பங்கு?
 (ஆ) 36kg தயாரிக்க தேவையான சீனியின் நிறை யாது?


17. வாகனம் ஒன்றின் பெற்றோல் செலவாகும் வீதம் 40 km/$\ell$ எனக் காணப்பட்டது. பெற்றோல் 1 லீற்றரின் விலை ரூபா60.
 (அ) 1km தூரத்திற்கான எரிபொருட் செலவு யாது?
 (ஆ) வாகனம் 80km $h^{-1}$ என்ற சீரான கதியில் 3 மணித்தியாலம் பிரயாணம் செய்வதற்கு ஆகும் எரிபொருட் செலவு யாது?


18. 

O இனை மையமாகக் கொண்ட வட்டத்தில் A நிலையான புள்ளியாக விருக்க AB என்பது ஒரு மாறும் நாண். AB யின் நடுப்புள்ளி C இன் ஒழுக்கு யாது?

19. மருந்து விசிறும் பொறியொன்றினை உடன் பணத்திற்கு ரூபா 12, 000 இற்கு வாங்கலாம். வாடகைக் கொள்வனவு முறையில், முற்பணமாக ரூ. 4, 000ஐயைச் செலுத்தி மீதியை 10 சமமாதக் கட்டணங்களாகச் செலுத்தி முடிக்கலாம்.
 (அ) வட்டியின்றி ஒரு தவணைக் கட்டணம் யாது?
 (ஆ) வட்டி செலுத்தவேண்டிய மாத அலகுகளின் எண்ணிக்கை யாது?

20. (அ) வடக்குத் திசையின் திசைகோள் யாது?
 (ஆ) $270°$ திசைகோள் குறிக்கும் திசை எது?

21. சாய்சதுரம் ABCD யில் AC=6cm, BD=8cm
 (அ) $A\hat{O}B$ இன் அளவு யாது?
 (ஆ) AB இன் நீளம் யாது?
 (இ) சாய்சதுரம் ABCD யின் பரப்பளவு யாது?



22. 

O என்பது வட்டமையம் AB, AC என்பன தொடலிகள்
 (அ) நாற்பக்கல் ABOC ஒரு பட்டம் என்பதற்கான சான்றுகள் எவை?
 (ஆ) நாற்பக்கல் ABOC ஒரு வட்ட நாற்பக்கல் என்பதற்கான சான்றுகள் எவை?

23. காணியொன்றின் அளவிடைப் படம் 1cm இனால் 10m காட்டப்படும் அளவிடைக்கு வரையப்பட்டுள்ளது.
 (அ) அளவிடையை ஏக பரிமாண அளவிடையில் தருக?
 (ஆ) அளவிடையைப் பின்னமாகத் தருக?
 (இ) படத்தின் பரப்பளவு 15$cm^2$ எனின் காணியின் பரப்பளவை $m^2$ இல் காண்க.

24. (அ) கோடாத ஒரு நாணயத்தைச் சுண்டும்போது, தலை தோன்றுவதற்கான நிகழ்தகவு யாது?
 (ஆ) கோடாத இரு நாணயங்களைச் சுண்டும்போது இரண்டிலும் தலை தோன்றுவதற்கான நிகழ்தகவு யாது?
 (இ) கோடாத மூன்று நாணயங்களைச் சுண்டும்போது, மூன்றிலும் தலை தோன்றுவதற்கான நிகழ்தகவு யாது?

25. தாவரம் ஒன்று ஒவ்வொரு நாளும் முதல்நாள் உயரத்தின் 0.1 பங்கு வளர்கின்றது. யூலை 22 அன்று 1m உயரமுடைய கன்று,
 (அ) யூலை 23 அன்று என்ன உயரமுடையதாகும்?
 (ஆ) யூலை 24 அன்று என்ன உயரமுடையதாகும்?

26. (அ) வருடம் 25% எளிய வட்டிக்குப் பெறப்பட்ட கடன் எவ்வளவு காலத்தில் 3 மடங்காகும்?
 (ஆ) கடன் ரூ. 1000 எனின், வட்டி எவ்வளவு?

27. ரூ. 20 பங்குகளை ரூ.25 விலைப்படி வாங்குவதற்கு லதா ரூ. 40,000 இனை முதலீடு செய்தார்.
 (அ) லதா வாங்கிய பங்குகள் எத்தனை?
 (ஆ) வாங்கிய பங்குகளின் பெயர் மாத்திரைப் பெறுமானம் யாது?
 (இ) கம்பனி 12% பங்கிலாபம் வழங்கினால் லதா பெறும் வருமானம் யாது?

28. $y=(x+1)^2-2$ என்ற வரைபு வரையப்பட்டால்,
 (அ) வரைபின் சமச்சீரச்சின் சமன்பாட்டினைத் தருக.
 (ஆ) $(x+1)^2-2$ இன் இழிவுப் பெறுமானம் யாது?
 (இ) வரைபின் திரும்பல் புள்ளி எது?

29. (அ) $\sqrt{3}$ =1.732 எனின் $\sqrt{300}$ பெறுமானம் காண்க.
 (ஆ) $\frac{1}{\sqrt{2}+1}$ இனை விகிதமுறு பகுதியெண்ணுடன் தருக.
 (இ) $\sqrt{C^{36}}$ இனைச் சுருக்குக.

30. திண்ம சதுரமுகியொன்றின் கனவளவு 216$cm^3$
 (அ) விளிம்பொன்றின் நீளம் யாது?
 (ஆ) சதுரமுகியின் ஒரு முகத்தின் பரப்பளவு யாது?
 (இ) சதுரமுகியின் எல்லா முகங்களினதும் மொத்த மேற்பரப்பளவு யாது?

**விடைகள் நாளைய வலம்புரியில்**

# கல்விப்பொதுத் தராதரப்பத்திர (சா-த)
## மாதிரிப் பரீட்சை - 2003
**பாடம் :-கணிதம்-II நேரம்:-3மணி**


**முதலாம் வினா உட்பட 8 வினாக்களுக்கு விடை தருக.**

01. (அ) நீள, அகல, உயரம் முறையே 8cm, 4cm, 8cm ஆக உள்ள கனவுரு வடிவப் பெட்டியொன்று உள்ளது.

I) பெட்டியில் சதுர வடிவான முகங்கள் எத்தனை உள்ளன?
II) பெட்டி மூடியுள்ளதாயின் மேற்பரப்பளவு யாது?
III) பெட்டியின் கொள்ளளவு யாது?
IV) பெட்டியுள் வைக்கக்கூடிய நேரான கோலின் மிகக்கூடிய நீளம் யாது?

(ஆ) I) $X^2-9$ ஐ காரணிப்படுத்துக.
II) (X-3) (X+5) இனை விரித்து எழுதுக.
III) சுருக்குக. $\dfrac{X^2-9}{X^2+2X-15}$

(இ)




ABCD என்பது ஓர் இணைகரம். இங்கு பக்கம் DC ஆனது E வரை நீட்டப்பட்டுள்ளது.

$B\hat{C}E = 80°, C\hat{B}D = 50°$ எனின்

I) $B\hat{D}C$ இன் அளவு யாது?
II) $B\hat{A}D$ இன் அளவு யாது?
III) DC=10cm, இணை ABCD இன் பரப்பளவு $56cm^2$ ஆகவிருப்பின் AB, CD ஆகிய பக்கங்களினிடை தூரம் யாது?

(ஈ) I) ஏறுவரிசையில் தருக.
0.5, 0.56, 0.4, 0.08
II) இரு காரணிகளை மட்டும் கொண்ட எண் எவ்வாறு அழைக்கப்படும்?
III) $\sqrt{128 X 128}$ எவ்வளவு?
IV) கரன், லதாவிடம் உள்ள பூனைகளின் மூன்று மடங்கு பூனைகளையும், லதா, சீதாவிடம் உள்ள பூனைகளிலும் 3 குறைவாகவும் வைத்திருக்கின்றனர். கரன் 6 பூனைகளை வைத்திருந்தால், சீதாவிடம் உள்ள பூனைகள் எத்தனை?

(உ) வெப்பநிலைகளை. செல்சியஸ் ($^oC$) முறையிலிருந்து பரனைற் ($^oF$) முறைக்கு மாற்றுவதற்கு பின்வரும் சூத்திரம் உபயோகிக்கப்படும்.

$$F = \frac{9C}{5} + 32$$

I) நீரின் கொதிநிலை $100^oC$ இனை பரனைற் முறையில் தருக.
II) நீரின் உறைநிலை $32^oF$ இனை செல்சியஸ் முறையில் தருக.
III) $X^o$ C = $\bar{X}^o$ F எனின் X இனைக் காண்க.

(ஊ) I) விருந்தொன்றில் ஆணும், பெண்ணுமாக 98 பேர் கலந்துகொண்டனர். ஆண், பெண் விகிதம் 2:5 எனின், பெண்களின் தொகை என்ன?
II) தீர்க்க. 4-3x>1
III) A இலிருந்து B யின் திசைகோள் $150^o$ எனின் B யிலிருந்து A யின் திசைகோள் யாது?
IV) sin $5^o$ = cos $x^o$ எனின் $x^o$ இன் பெறுமானம் யாது?

2. வடிகால் குழாய் ஒன்றின் சீரான குறுக்குவெட்டு முகம் படத்தில் காட்டப்பட்டுள்ளது.அதன் இரு கரைகளிலும் இரு அரைவட்டப் பகுதிகள் உள்ளன.





I) குறுக்குவெட்டு முகத்தின் சுற்றளவு யாது?
II) குறுக்குவெட்டு முகப்பரப்பளவு யாது?
III) 10m நீளமான குழாய் தயாரிக்கத் தேவையான உலோகத்தகட்டின் பரப்பளவு யாது?
IV) 10m நீளமான குழாயின் கொள்ளளவு யாது?

3. (அ) 6, 10, 14-------- என்ற கூட்டல் தொடரில்
I) 27 ஆம் உறுப்பு எது?
II) 206 எத்தனையாம் உறுப்பு?
III) தொடரின் முதல் 10 உறுப்புக்களின் கூட்டல் யாது?
IV) முதல் எத்தனை உறுப்புக்களின் கூட்டல் 880 ஆகும்.

(ஆ) பெருக்கல் தொடரொன்றில் முதலுறுப்பு 7, இரண்டாம், மூன்றாம் உறுப்புக்களின் கூட்டல் 42 எனின்,
I) பொது விகிதம் யாது?
II) 4 ஆம் உறுப்பு யாது?

04. I) $6x^2 + 31x + 5$ இனைக் காரணிப்படுத்துக.
II) $9c^2 + 30c + k$ என்பது ஒரு நிறைவர்க்கமெனின், k இன் பெறுமானம் யாது?
III) தீர்க்க: $x^3 = 9x$
IV) y=2x+1, y=3x+7 ஆகிய நேர்கோடுகள் சந்திக்கும் புள்ளியின் ஆள்கூறுகளைக் காண்க.

05. A, B ஆகியோர் 100m இடைத்தூரத்தில் நிற்கின்றனர். இருவரும் நிற்கும் நேர்கோட்டில் A, B ஆகியோருக்கிடையில் நிலைக்குத்தான கம்பம் நிற்கிறது. A, B ஆகியோருக்கு கம்பத்தின் நுனி முறையே $63^o$ 26', $53^o$ 8' ஏற்றக்கோணங்களில் தென்படுகின்றது.




கம்பம் xm உயரமுடையது எனவும், கம்பம் A இலிருந்து Ym தூரத்தில் உள்ளது எனவும் கொண்டால்,
I) x, y இல் இரு சமன்பாடுகள் பெறுக.
II) x, y இனைக் கிட்டிய முழுவெண்ணில் காண்க.

06. △ ABC இல் AX என்பது இடையம். AX இன் நடுப்புள்ளி D ஆகும். நீட்டப்பட்ட BD ஆனது, AC என்பதை Y இல் சந்திக்கின்றது. பொருத்தமான அமைப்பு வரைந்து $Ay = \frac{1}{3} AC$ என நிறுவுக.


07. அ) சுருக்குக: I) $\dfrac{Log_5 8}{Log_5 2}$
II) $Lg\,300 - Lg\,3$

(ஆ) மடக்கை அட்டவணையை உபயோகித்து சுருக்கி விடையை கிட்டிய இரண்டு தசமங்களில் தருக.

$$\frac{\sqrt[3]{28.64 X 0.6849}}{6.837 X 12.82}$$


08. கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்றில் ரூ. 10, 000 ஐக் கடனாகப் பெற்றவர் 20 மாதங்களில் மாதம் 3% வட்டியுடன் சமமாதத் தவணைக் கட்டணங்களாகச் செலுத்தி முடிக்க உடன்படுகிறார்.
I) வட்டியின்றி ஒருதவணைக் கட்டணம் யாது?
II) வட்டி செலுத்தவேண்டிய மாத அலகுகள் எத்தனை?
III) வட்டியைக் கணிக்க?
IV)வட்டியுடன் ஒரு தவணைக் கட்டணம் யாது?

09. (அ)




O இனை மையமாக உடைய வட்டத்தின் பரிதியில் A, B, C என்னும் புள்ளிகள் உள்ளன.
$A\hat{O}B = 112°, B\hat{O}C = 100°$ எனின்,
I) △ ABC இன் கோணங்களைக் கணிக்க.
II) △ AOC இன் கோணங்களைக் கணிக்க.

(ஆ)




ABCD என்பது ஒரு சரிவகம் அதில் AB//DC, AD=BC பக்கம் DA இற்கு சமாந்தரமாக C யினூடாக வரையப்பட்ட கோடு நீட்டப்பட்ட AB யினை E இல் சந்திக்கிறது.
I) நாற் ADCE ஓர் இணைகரமெனக் காட்டுக.
II) BC=CE எனக் காட்டுக.
III) $A\hat{D}C = C\hat{B}E$ எனக் காட்டுக.
IV) $A\hat{D}C = C\hat{B}E$ எனின் A, B, C, D ஆகிய புள்ளிகளின் விசேட தத்துவம் யாது?

10. ரவி பூச்செடி விதைப் பக்கற் ஒன்றின் ஒரு பகுதியை விதைத்து முளைத்த கன்றுகளில் 25 சிவப்புப் பூக்கன்றுகளாகவும், 15 மஞ்சட் பூக்கன்றுகளாகவும், 10 வெள்ளைப்பூக்கன்றுகளாகவும் காணப்பட்டன.
(அ) அவற்றுள் ஒன்றினை எழுமாறாகப் பிடுங்கினால் அது
I) சிவப்புப் பூக்கன்றாக II) மஞ்சட்பூக்கன்றாக III) வெள்ளைப்பூக்கன்றாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?
ஆ) ரவி பக்கற்றில் இருந்த மீதி விதைகளை விதைத்து முளைத்த கன்றுகள் பூக்கும் முன் அவற்றிலிருந்து இரண்டு கன்றுகளைத் தெரிவுசெய்தால் அவை
I) இரண்டும் சிவப்புப் பூக்கன்றாக
II) இரண்டும் சிவப்புப் பூக்கன்றுகள் அல்லாதனவாக
III) ஒன்று சிவப்புப் பூக்கன்று மற்றையது வெள்ளைப்பூக்கன்றாக இருப்பதற்கான நிகழ்தகவுகளைக் காண்க.

# தேக்க நிலையிலுள்ள சமாதான முயற்சிகளுக்கு புத்துயிரூட்டும் நடவடிக்கைகள் மும்முரம்

## அகாஷியின் பணி ஆரம்பமாகியுள்ள நிலையில் நோர்வேக் குழு நாளை வருகிறது

(கொழும்பு)

பின்னடைவைச் சந்தித்துள்ள



சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் வகையில் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் மற்றும் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் நாளை கொழும்பு வரவுள்ளனர்.

திருகோணமலையில் உள்ள வான் எலபகுதியில் புலிகள் புதிதாக முகாம் அமைப்பதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து கண்காணிப்புக் குழுவினரைச் சந்தித்து இவ் விஜயத்தின் போது, கலந்துரையாடவுள்ள இவர்கள், திருமலையில் புலிகளால் அமைக்கப்பட்டுள்ள குரங்குபாஞ்சான் குள முகாம் தொடர்பில் போர்நிறுத்தக்



கண்காணிப்புக் குழுவினரால் நோர்வேக்கு எழுதப்பட்ட கடிதம் குறித்தும் இச் சந்தர்ப்பத்தில் பிரஸ்தாபிப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

தவிரவும்,சமாதான முயற்சிகளை முன்னேற்ற கரமாக முன்னெடுப்பது குறித்து அரசாங்கத்தின் உயர் மட்டத் தலைவர்களையும் அத்துடன், வன்னி சென்று புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனையும் இவர்கள் சந்திக்கத் திட்டமிட்டுள்ளனர்.

வட-கிழக்கு இடைக்கால நிர்வாக சபை தொடர்பான புலிகளின் நிலைப்பாட்டைக் கேட்டறிவதே இவர்களின் வன்னி விஜய நோக்கமெனக் கூறப்படுகிறது.

இதேவேளை,தேக்கநிலையிலுள்ள சமாதான முயற்சிகளை ஊக்கப்படுத்தும் முகமாக கடந்த வியாழனன்று ஆறுநாள் விஜயம் மேறகொண்டு இலங்கை வந்த ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி, இங்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதுடன், கிழக்கு மாகாணம் மற்றும் வன்னி ஆகிய பகுதிகளுக்குச் சென்று படையினர் மற்றும் புலிகளின் பிரமுகர்களையும், படை உயரதிகாரிகள், தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகள் ஆகியோரையும் சந்தித்து இது விடயமாகக் கலந்துரையாடி வருவதும்,

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பித்தால் மாத்திரமே டோக்கியோ மாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட,இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கான நிதி உதவி



களை வழங்க முடியும் என யசூசி அகாஷி கடந்த வெள்ளியன்று கொழும்பில் கூட்டிய மேற்படி நிதி பகிர்ந்தளிக்கும் மாநாட்டில் அறிவிப்பு விடுத்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ)


### சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

வைத்தியரின் சொந்தப் பாவனையில் நல்ல நிலையில் உள்ள TOYOTA HIACE விற்பனைக்கு உண்டு (சகல ஆவணங்களுடனும்) தொடர்பு: T.PHONE -0777-589608 (7463)

**தவறிவிட்டது**

09.09.2003 அன்று வல்லை வீதியில் சண்முகராசா வினோதகாந் என்பவரது தேசிய அடையாள அட்டை 823462182V, வி.அ.அ. (0905007511)யும் பணமும் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (C-7469)


### இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

தீவக அரிமாக்கழகத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00மணி முதல் காரைநகர் சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயத்தில் இலவச மருத்துவ முகாம் இடம்பெறவுள்ளது.

இதில் கண் பரிசோதனை,பொது வைத்தியம் ,தோல் வியாதிகளுக்கான பரிசோதனை ஆகியன மேற்கொள்ளப்படவிருப்பதுடன், மருததுவ ஆலோசனை மற்றும் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல் என்பனவும் இடம் பெறவுள்ளன. (உ)

## சிலாவத்தையில் சந்தையில்லை பொதுமக்கள் மிகுந்த சிரமம்

(மருதங்கேணி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சிலாவத்தையில் பொதுச் சந்தை இல்லாத காரணத்தினால் இப்பகுதி மக்கள் வாங்குதல் -விற்றல் செயற்பாடுகளுக்கு பெரிதும் சிரமப்பட்டு வருகின்றனர்.

இதன் காரணமாக,சுகாதாரம் அற்ற முறையில் வீதியோரங்களில் விற்பனை செய்யப்படும் உணவுப் பொருட்களை வாங்கவேண்டிய நிலைக்குத் தாம் தள்ளப்பட்டிருப்பதாக இவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அத்துடன்,பல்வேறு தேவைகளுக்கும் 3கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள முல்லைத்தீவுப் பொதுச் சந்தையை பெரும் சிரமங்களுக்கு மத்தியில் இவர்கள் நாடிவருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-35)

## தற்காலிக கொட்டகையில் இயங்கும் பளைப் பாடசாலை

(மருதங்கேணி)

பளை சி.சி.த.க. பாடசாலை,நிரந்தரக் கட்டடமோ அன்றி குடிநீர் வசதி களோ அற்ற நிலையில் தொடர்ந்தும் தற்காலிக கொட்டகையிலேயே இயங்கி வருகிறது.

1990ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளாலும் யுத்த அனர்த்தங்களாலும் இடம் பெயர்ந்த இப்பாடசாலை இவ்வாண்டு முதல் மீண்டும் சொந்த இடத்தில் தற்காலிக கொட்டகையில் இயங்கி வருகிறது.

முன்னர் 380மாணவர்களுடனும் போதிய ஆசிரிய வளத்துத்துடனும் இயங்கிவந்த மேற்படி பாடசாலையில் தற்போது 169 மாணவர்கள் மாத்திரமே கல்வி கற்று வருகின்றனர்.

அத்துடன், போதிய ஆசிரிய வளமும் இங்கு தற்போது இல்லாதிருப்பதுடன்,10 ஆசிரியர்களின் சேவை எதிர்பார்க்கப்படுகின்றபோதிலும் ஐவர் மாத்திரமே பணியாற்றி வருகின்றனர். (உ-35)


### வாழ்த்துகின்றோம்



**முது பெரும்புலவர், கலாபூஷணம் வை. க. சிற்றம்பலம் அவர்களது 90ஆவது பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுகிறது. இறைபணியோடு, இலக்கியப்பணி ஆற்றிவரும் புலவர் அவர்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்து, பணி செய்ய வாழ்த்துகின்றோம்.**

மே/பா.சி.சிவஞானராஜா
'மிதிலை'
ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில்,மேற்கு,
கொக்குவில்:16.09.2003

**மக்கள்,மருமக்கள் பேரப்பிள்ளைகள்**

(7467)


## வடமராட்சி வலய கணித-விஞ்ஞான போட்டி முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலே நடாத்தப்பட்ட கணித-விஞ்ஞானப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

சித்தியடைந்தவர்களின் பெயர், விபரம் வருமாறு,

**தரம் –06**

செ.சாருண்யா-மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.
எஸ்.அரவிந்,எஸ்.சுஜீவன்,எஸ்.பிரணவன,எஸ்சுதர்சன, எஸ். சர்மலன் ரி.நிஷாந்தன் -பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.

**தரம் –07**

நா.பவித்திரன்-விக்னேஸ்வரா கல்லூரி.
எஸ். ரஜீபவன் -பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.
எஸ். மெக்சிபாரதா-மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.
எஸ். விதுரன் -பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.
அ.நிதர்சன்-விக்னேஸ்வரா கல்லூரி.
ரி. பிரணவன் -பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.
பா.கோகுலன் -பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.
த.பிரதீபா-மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

**தரம் –08**

கே.உமாசுதன்-பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி.
பா.குருபரன்-உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.
எஸ்.அபிராமி-மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.
எஸ்.ராகுலகீதன்-பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.
ந.கிருஷ்ணா- வட இந்து மகளிர் கல்லூரி.
த. இந்துஷா- மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

**தரம் –09**

கே.வாகீசன்-பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.
க.கௌசிகா-வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.
சி.சேயந்தன்- உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலை.
ச.கார்திஜா- மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.
க.சிந்துஜா-வட இந்து மகளிர் கல்லூரி.
ஆர்.மோகனப்பிரியன்-பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.

**தரம் –10**

ரி.சுபேந்திரராஜா-பருத்தித்துறை ஹாடலிக் கல்லூரி.
வே.சுகன்ஜா-வட இந்து மகளிர் கல்லூரி.
த.தர்மினி-மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.
வி.நிஷாந்தி-வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.
ஆர். ரஜீவன் -பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.
பி.ஜானகி-மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.
வி.சிந்துஜா-மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.
சி.மாதுளா-மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

**தரம் –11**

இ. இராகுலன் -பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.
க.பிரதீபன்-பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.
அ.ஜெசிந்தா-மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.
எஸ். அனுசியா-விக்னேஸ்வரா கல்லூரி.
ச.உமா-வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.
ம.அனர்தினி-வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி. (உ-18)

## பளைக் கோட்ட கணித-விஞ்ஞானப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

பளை கோட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடாத்தப்பட்ட கணித-விஞ்ஞானப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன. அவற்றின் விபரம் வருமாறு,

**தரம்-06**

1ம் இடம்:அ.ஸ்ரீபன்-பளை மத்திய கல்லூரி.
2ம் இடம்:இ.நிரூபி-பளை மத்திய கல்லூரி.
3ம் இடம்:வெ.யோவ்வேல்-கிளி/ றோ.க.த.க.பாடசாலை.

**தரம்-07**

1ம் இடம்:அ.ரேணுகா-பளை மத்திய கல்லூரி.
2ம் இடம்:த.தர்மராஜ்-பளை மத்திய கல்லூரி.
3ம் இடம்:ச.பிரதீபன் -வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலை.

**தரம்-08**

1ம் இடம்:சி.வினோதரன் -பளை மத்திய கல்லூரி.
2ம் இடம்: வி.விதுஷா-பளை மத்திய கல்லூரி.
3ம் இடம்:சி.ஜெனார்த்தனி-மாசார் அ.த.க. பாடசாலை.

**தரம்-09**

1ம் இடம்: ம.பிரசாந்தினி-சோரன்பற்று கணேசா வித்தியாலயம்.
2ம் இடம்: த.தர்மராஜினி-பளை மத்திய கல்லூரி.
3ம் இடம்: இ.தபோதினி-சோரன் பற்று கணேசா வித்தியாலயம்.

**தரம்-10**

1ம் இடம்:பா.உதயேந்திரன்-பளை மத்திய கல்லூரி.
2ம் இடம்:சி.சுகிர்தா-பளை மத்திய கல்லூரி.
3ம் இடம்:வீ.கலைவாணி-மாசார் அ.த.க.பாடசாலை.

**தரம்-11**

1ம் இடம்:மு. சுஜீபா-வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலை.
2ம் இடம்: கு.கேதிகா-வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலை.
3ம் இடம்:சு.யோகலட்சுமி-பளை மத்திய கல்லூரி.

**தரம்-12,13**

1ம் இடம்: தி.மயூரன்-பளை மத்திய கல்லூரி.
2ம் இடம்: சி.உமைசொரூபி-பளை மத்திய கல்லூரி.
3ம் இடம்: த.வாகீசன்-பளை மத்திய கல்லூரி. (உ-18)

## மலசலகூட வசதி

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீளக்குடியமர்ந்த பின் இயங்கிவரும் 10 பாடசாலைகளுக்கு ஜி.ரி.இசற் நிறுவனம் மலசலகூட வசதிகளை அமைத்துக் கொடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. (உ-35)

## இன்று ஒரு தகவல்

# முன்னேறும் வழிமுறை

வாழ்வில் முன்னேற வேண்டும் என்பது தான் எல்லோருக்கும் ஆசை! ஆனால் சில நேரங்களில் அது இயலாது போய்விடும். அப்படி இயலாமல் போனதற்கு என்ன காரணம் என்று நாம்ஆலோசனை செய்து அந்தத் தடைகளை நீக்க வேண்டும். வாழ்க்கை முன்னேற்றத்தைப் பற்றி ஆலோசனை செய்யும் அறிஞர்கள் இதுபற்றி என்ன கூறுகின்றனர் என்றால் பல நேரங்களில் நாம் நினைத்த வெற்றியை அடைய முடியாமல் போவதற்கு அடிப்படையான காரணம் என்னவென்றால் முடிவெடுக்கும் திறமை. அந்த முடிவெடுக்கும் திறமையில் சிறிது தடங்கல் ஏற்பட்டால் வெற்றிக்கனியை நாம் பறிக்க முடியாது போய் விடும் என்கின்றனர்!

ஒரு பிரச்சினைக்கு முடிவெடுக்கும் போது மிகவும் தீர்க்கமானதொரு சிந்தனையோட்டத்துடன் இருக்க வேண்டும் என்று கூறுகின்றனர். அதற்கு அவர்கள் சில வழிமுறைகளையும் கூறுகின்றனர். நாம் எந்தச் சூழ்நிலையில் முடிவெடுக்கின்றோம் அந்த நேரத்தில் கோபத்துடன் இருக்கின்றோமா? அல்லது பரபரப்பாக இருக்கின்றோமா? மனப்பதற்றத்துடன் இருக்கின்றோமா?இந்த சூழ்நிலைகளை மனதில் வைத்துக்கொண்டு அமைதியாக நிதானமாக இருக்கும்போது எடுக்கின்ற முடிவுதான சரியான முடிவாக இருக்கும்.

கோபத்தின் உச்சியில் இருக்கும்போது எடுக்கின்ற ஓர் முடிவு நிச்சயமாகத் தவறானதாகத்தான் அமையும். அதனால்தான் ஆத்திரக்காரனுக்கு அறிவு மட்டு என்று கூறுவார்கள். அதனால் கோபப்படுகின்ற சூழ்நிலையை மாற்றி நிதானம் வந்த பிறகு முடிவெடுப்பதற்கு முயல வேண்டும்.

இதுபோன்று இன்னுமொரு ஆலோசனையையும் கூறுகின்றனர். முடிவெடுப்பதில் தேவையில்லாத தாமதம் காட்டக்கூடாது. அந்த முடிவு துரிதமாக எடுக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் அவசரமில்லாமல் எடுக்கப்பட வேண்டும். துரிதமாக எடுக்கப்படுகின்ற முடிவுக்கும் அவசரப்பட்டு எடுக்கின்ற முடிவுக்கும் வித்தியாசம் உண்டு. முடிவெடுப்பதில் தாமதம் கூடாது. ஆனால் அதற்காக பரபரப்பாக, அந்த விடயத்தின் தன்மை முழுதும் விளங்காமல் அவசர முடிவு எடுத்துவிடக் கூடாது!

இப்படிப்பட்ட உணர்ச்சிகளை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். அடுத்து இன்னும் ஓர் ஆலோசனை கூறுகின்றனர். கூட்டு ஆலோசனை! தனியாக இருந்து முடிவெடுப்பதைவிட பிறருடன் கலந்தாலோசித்து ஒரு முடிவெடுக்கும்போது ஒவ்வொருவரும் தத்தமது கருத்துக்களை கூறுவார்கள். அதில் உண்மையான நல்ல கருத்துக்களை தெரிவு செய்யலாம். இவ்வாறு கூட்டு ஆலோசனையும் செய்யலாம்.

அறிஞர்கள் என்ன கூறுகின்றனர் என்றால் கூட்டு ஆலோசனை செய்வது சரியானதே. ஆனால் அவற்றை வகுத்துத் தொகுத்து வைத்துக்கொண்டு இறுதி முடிவெடுப்பது நீங்களாகத்தான் இருக்க வேண்டும். மற்றவர் சொல்வதற்காக நீங்கள் இறுதி முடிவெடுக்கக்கூடாது. ஒரு தெளிவினைக்கண்ட பின்பு நீங்கள் தான் இறுதி முடிவெடுக்க வேண்டும்.

அடுத்ததாக இன்னுமொன்றையும் கூறுகின்றனர். முடிவெடுக்கும் சமயத்தில் நமது அறிவைச் சரியாகப் பயன்படுத்தியிருக்கின்றோமா? அனுபவத்தைச் சரியாகப் பயன்படுத்தியிருக்கின்றோமா? ஏன் என்றால் இதற்கு முன்பும் இதனைப்போல் நடந்து ஏதாவது விளைவுகள் ஏற்பட்டிருந்தால் அதன் முடிவு எப்படியிருந்தது? அந்த அடிப்படையில் தற்போதைய முடிவு என்ன மாதிரியான சூழ்நிலைகளை உருவாககும்? முன்னைய அனுபவங்களையும் இணைத்து நாம் முடிவெடுக்கின்றோமா?

இவற்றை விட துணிவு மிக முக்கியமானது. பயந்து கொண்டிருக்கக்கூடாது. அறிஞர் ஒருவர் கூறினார் தோற்று விடுவோம் என்ற அச்சத்தில் முயற்சி செய்யாமல் இருப்பது குற்றம். முயற்சி செய்து தோற்பது தவறில்லை. எனவே துணிச்சல் வேண்டும். தன்னம்பிக்கை வேண்டும். முடிவெடுத்த பின் அந்த முடிவில் உறுதியாக இருக்கும் தன்னம்பிக்கை வேண்டும் இதையே வள்ளுவர் கூறுகின்றார் இப்படி. எண்ணித்துணிக கருமம் துணிந்த பின் எண்ணுவது என்பது இழுக்கு.

இவற்றிலே முக்கியமான விடயம்என்னவென்றால் நழக்கு வரும் நன்மைகளை மட்டுமே வைத்து முடிவெடுக்கக்கூடாது. இதனால் பிறருக்கு ஏதாவது தீமைகள் ஏற்படுமா என்பதையும் ஆலோசிக்க வேண்டும். இவ்வாறு முயற்சி செய்து நல்ல முடிவு எடுத்தால் வெற்றி நிச்சயம்.

சிலர் வேறு மாதிரி முயற்சி செய்வார்கள். "ஒருவர் பெரிய ஆஸ்பத்திரிக்குச் சென்றார். நான் வியாபாரம் ஆரம்பிக்கப்போகின்றேன். அதற்கு எனக்கு 10ஆயிரம் ரூபா கடன் வேண்டும்" என்றார். டாக்டர் கூறினார் "இதற்கு நீங்கள் வங்கிக்கல்லவா போகவேண்டும். ஆஸ்பத்திரிக்கு வந்து கடன் கேட்கின்றீர்களே!" என்றார். உடனே அவா கூறினாராம் "உங்கள் ஆஸ்பத்திரியில் தானே எழுதிப் போட்டிருக்கின்றீர்கள் இங்கு முதலுதவி தரப்படும். வியாபாரத்திற்கு முதல் கேட்கத்தானே நான் வந்திருக்கின்றேன்" என்றார்.

இளசை எஸ். சுந்தரம்

# கடற்படைக்கு நம்பிக்கைத் துரோகம் இழைத்துவிட்டார் கதிர்காமர்

## தளபதி தயாசந்தகிரி சீறிப்பாய்ச்சல்

(கொழும்பு)

முன்னாள் வெளிவிவகார அமைசசரும்,ஜனாதிபதியின் ஆலோசகருமாகிய லக்ஷ்மன் கதிர்காமர் தமக்கு நம்பிக்கைத் துரோகம் இழைத்துவிட்டதாக கடற்படைத் தளபதி தயாசந்தகிரி குற்றம்சாட்டியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நிலைவரங்கள் குறித்த கடற்படையின் அறிக்கையை ஊடகங்களுக்கு வெளியிட்டமை குறித்து, கதிர்காமர் மீது இவ்வாறு அதிருப்தி வெளியிட்டுள்ளார் தயாசந்தகிரி.

இதுபற்றி கருத்து வெளியிட்டுள்ள கடற்படைத் தளபதி,

கிழக்கு மாகாணப் பாதுகாப்பு நிலைவரங்கள் தொடர்பான அறிக்கை ஒன்றினைத் தயாரித்து அனுப்பும்படி ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்திருத்தமைக்கு அமைவாக, கிழக்கு மாகாணக் கடற்படைத் தளபதி வசந்த கருணாகொட, தான் தயாரித்த அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி செயலகத்திற்குச் சென்றபோது,மேற்படி அறிக்கையை தனது ஆலோசகரான லக்ஷ்மன் கதிர்காமரிடம் வழங்கும்படி ஜனாதிபதி பணித்திருநதார்.

ஆனால், இந்த அறிக்கையின் இரகசியத் தன்மையைப் பேண கதிர்காமர் மறந்து விட்டார்.

இந்த அறிக்கையை ஊடகங்களுக்கு வழங்கியதன் மூலம் லக்ஷ்மன் கதிர்காமர் நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி விட்டார்.

இந்த அறிக்கையை லக்ஷ்மன் கதிர்காமருக்குக் காட்டியபோது அதை ஊடகங்களுக்கு அனுப்பப் போவதாக கேட்டுக்கொள்ள வில்லை.

இவ் அறிக்கை ஜனாதிபதி மாளிகையில் கையளிக்கப்பட்டபோது இராணுவத் தளபதி லயனல் பலகல்லவும் உடனிருந்தார்.

ஜனாதிபதி ஒரு கட்சியையும் அரசாங்கம் மற்றொரு கட்சியையும் சார்ந்திருப்பதன் பாதகமான சூழ்நிலையை தளபதிகள் இப்போது தான் எதிர்நோக்கியுள்ளனர்.இவ் இரு தரப்பினருக்கும் இடையேயும் நாம் சிக்குண்டு தவிக்கின்றோம்.

நாங்கள் ஒன்றுபட்டு ஒரே குழுவாகச் செயற்பட வேண்டும் என்பதை சம்பந்தப்பட்டவர்களிடம் அடிக்கடி நாம் கோரிவருகின்றோம்.

நாட்டின் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியிலான ஓர் தீர்வே காணப்படவேண்டும் என்று அவர் மேலும் கூறியுள்ளார். (உ-63,8)

# கொத்மலை நீர்மின் வலுத் திட்டத்தை பரிசீலனை செய்யக் கோரிக்கை

(கொழும்பு)

மேல் கொத்மலை நீர்மின் வலுத திட்டத்தை அமைப்பது குறித்து பரிசீலனை செய்ய வேண்டும் என இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைக்கான ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷியிடம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான குழுவினர் நேற்று முனதினம் மாலை அகாஷியை அலரி மாளிகையில் சந்தித்துப் பேசும்போதே இதனை வலியுறுத்தியுள்ளனர்.

இச்சந்திப்பில் மேல் கொத்மலை நீர்மின் வலுத்திட்டம் அமைக்கப்படுவதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து தெளிவுபடுத்தும் மகஜர் ஒன்றும் அவரிடம் கையளிக்கப்பட்டது.

அத்துடன்,இந்தத் திட்டம் அமுல்படுத்தப்பட்டால் ஏற்படும் சுற்றாடல், சமூக ,பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து தெளிவாக விளக்கப்பட்டது.

மேலும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.அரசின் சமாதான முயற்சிகளுக்கு தமது கட்சி பூரண ஆதரவு வழங்குமென கட்சியின் பிரதிநிதிகள் விசேடதூதுவரிடம் உறுதியளித்துள்ளனர்.

இச்சந்திப்பின் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட,பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன்,இ.தொ.கா. கட்சியின் பிரதிநிதிகள்,ஜப்பான் தூதுக்குழுவினர் ஆகியோர் கலந்து கொண்டனர். (தி-61)

## இராசி பலன்

**16. 09. 2003**

**(ஆவணி 30, செவ்வாய்)**

**சஷ்டி முழுவதும்**

**கார்த்திகை -பி.இ.4.37வரை**

**இராகுகாலம் - 3.03 - 4.33**

**சுபநேரம் - 10.33- 12.03**

**சித்தாமிர்தம் -கார்த்திகைவிரதம**

**மேடம்**
அதிக செலவு,மனஸ்தாபம்,காரிய தடங்கல் ரோக நிலை

**இடபம்**
தெய்வ சிந்தை,வெகு மானம், காரிய சித்தி,மன மகிழ்ச்சி

**மிதுனம்**
காரிய அலைச்சல்,உணர்ச்சி வசபடல்,சுப செலவு,தொழில் நன்மை

**கடகம்**
ஸ்திரி நன்மை,நண்பர்கள் உதவி,போசன சுகம்,சயன சுகம்

**சிங்கம்**
நல்ல மரியாதை,பிறர் உதவுதல், தொழில் சிறப்பு,காரிய நன்மை

**கன்னி**
எதிர்பாராத செலவு,உத்தியோக பங்கம்,போசன சுகம்,திடீர் பயணம்

**துலாம்**
நண்பர்களின் விரோதம்,அஜீரணக் கோளாறு,காரிய தாமதம்,முயற்சி தடங்கல

**விருச்சிகம்**
குடும்ப சுகம்,நண்பர்களின் சந்திப்பு,புதிய பொருள் சேர்க்கை, முயற்சி பலிதம்

**தனுசு**
தேக ஆரோக்கியம்,மன மகிழ்ச்சி, காரிய சித்தி,சத்துரு ஜெயம்

**மகரம்**
தாழ்ந்த சுபாவம்,காரிய இடையூறு, உடல்நலக்குறைவு,தனவிரயம்

**கும்பம்**
தன்னம்பிக்கை குறைவு, தனநாசம், காரிய தடங்கல்,நண்பர்கள் உதவி

**மீனம்**
கூட்டுமுயற்சி,தனவரவு,போசன சுகம்,அன்னியர் சந்திப்பு.

(பழையநேரப்படி கணிட் பிடப்பட்டது)

- வளவன்.

## இடமாற்றம

(யாழ்ப்பாணம்)

சென் அன்ரனிஸ் றோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய த.ஞானப்பிரகாசம் கடந்த மாதம் 5ஆம் தகதி முதல் சென்ஜேம்ஸ் மகாவிததியாலயத் திற்கு அதிபராக இடமாற்றப்பட்டுள்ளார்.

மேற்படி வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய த.தங்கராசா யாழ். கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளதை அடுத்தே இவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (தி)

# சம்பள முரண்பாட்டுக்கு தீர்வில்லை அடுத்த நடவடிக்கை விரைவில்

### சுகாதாரத் துறை ஊழியர் அறிவிப்பு

(கொழும்பு)

சுகாதாரத்துறை ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளுக்கு தீர்வு காண வழங்கப்பட்ட கால அவகாசம் நேற்றுடன் முடிவடைந்துள்ளது.

இதனை அடுத்து,சுகாதாரத் துறை ஊழியர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் அடுதத கட்ட நடவடிக்கைகள் குறித்து இன்று தீர்மானிக்கப்படும் என தொழிற் சங்கக கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில்,இக்கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும்,சுகாதார அமைச்சர் பி. தயாரட்ணவுக்கும் இடையில் அண்மையில் நடைபெற்ற சந்திப்பின் போது ,அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட உப குழு மற்றும் திறைசேரி உத்தியோகத்தர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த கால அவகாசம் வழங்குமாறு தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடம் கேட்கப்பட்டது.

இதன்படி இப்பேச்சுவார்த்தையை இன்று நடத்த சுகாதார அமைச்சு திட்டமிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (தி-61)

# பயணிகளின் நலன் கருதி விசேட பொலிஸ் பிரிவு

(கொழும்பு)

கொழும்பு நகருக்கு வரும் வெளிமாவட்டப் பயணிகள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் நன்மை கருதி விசேட பொலிஸ் பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக கொழும்பு நகருக்கு வரும் பயணிகளை அச்சுறுத்தி அவர்களின் உடைமைகள இனந தெரியாத நபர்களினால் கொள்ளை யிடப்பட்டு வருவதை அடுத்தே இப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

இவ்விசேட பிரிவுப் பொலிஸார் சிவில் உடையில்,மக்களோடு மக்களாக நின்று தமது கடமைகளில் ஈடுபடுவர் என பொலிஸ்மா அதிபர் ரீ.ஈ. ஆனந்தராஜா அறிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக கொழும்பு நகரையும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதை அடுத்து திடீர்ச் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது தெரிந்ததே. (தி-18)

அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான்எஞ் ஞான்றும்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை
– குறள்

## வலம்புரி

### குழப்புகிறது அமெரிக்கா

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள திருகோணமலைப் பகுதியை கடற்படையினர் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவேண்டுமென அமெரிக்க இராணுவ அதிகாரிகள் குழுவொன்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலைத் துறைமுகம் பாதுகாக்கப்பட வேண்டுமாயின், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள திருமலையின் தென் பகுதியைப் படையினர் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவேண்டுமென்ற அமெரிக்க இராணுவ அதிகாரக் குழுவின் அறிக்கை மீண்டும் யுத்தத்தைத் தூண்டும் நடவடிக்கையாக அமைந்துள்ளது.

விடுதலைப். புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள திருகோணமலையின் தென்பகுதியை படையினரிடம் விடுதலைப் புலிகள் ஒருபோதும் விட்டுக் கொடுக்கப்போவதில்லை. அவ்வாறு விட்டுக் கொடுக்கும் நிபந்தனைகள் எதுவும் புரிந்துணர்வு உடன்படிக்கையிலும் குறிப்பிடப்படவில்லை. இந்நிலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள திருகோணமலையின் தென்பகுதியை படையினர் மீட்டெடுக்க வேண்டுமாயின், மீண்டும் அங்கு யுத்த நடவடிக்கைகள் தொடரப்பட வேண்டும்.

படையினர் யுத்தத்தைத் தொடுத்தாலும் திருமலையின் தென்பகுதியை அவர்கள் கைப்பற்றி விடுவார்கள் என்பது வெறும் கனவாகவே இருக்கும் ஆனாலும் மீண்டுமோர் யுத்தத்தை தூண்டிவிக்கும் நோக்குடன் அமெரிக்க இராணுவ அதிகாரக் குழுவின் அறிக்கை அமைந்துள்ளது.

அதிலும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலைத் துறைமுகத்தின் மீது அமெரிக்கா கண்வைத்திருப்பது வெளிப்படையான உண்மை. இருந்தும் திருகோணமலைத் துறைமுகத்தில் அமெரிக்கா கால்பதித்து விடக் கூடாதென்பதில் இந்தியா அவதானமாகவுள்ளது. அமெரிக்காவின் வருகையைத் தடுப்பதனை இலக்காகக் கொண்டே திருகோணமலை எண்ணெய்க் குதங்களை இந்தியா குத்தகைக்கு எடுத்துக் கொண்டது. திருகோணமலை விடயத்தில் இந்தியா முந்திக் கொண்டதால் ஆத்திரமுற்ற அமெரிக்கா, அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையே மீண்டுமொரு யுத்தத்தை ஏற்படுத்தி அதன் மூலம், இந்தியாவை வெளியேற்றத் திட்டமிட்டுள்ளது.

தனது திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் திருகோணமலையில யுத்தத்தை ஆரம்பிப்பதே பொருத்தமானதென அமெரிக்கா கருதுகிறது. இதற்காகவே விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள திருகோணமலையின் தென் பகுதியை படையினர் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர வேண்டுமென்ற சதித் திட்டத்தை அமெரிக்கா தயாரித்து வெளியிட்டுள்ளது.

# வெண்புள்ளி நோயை விரட்டி வெற்றியை உங்கள் வசமாக்குங்கள்

## மருத்துவ விளக்கம்

வெள்ளைத் தழும்புகள் அல்லது வெண் குஷ்டம் என்று அழைக்கப்படும் நோயால் நோயாளியின் உடலை விட அதிகமாக பாதிக்கப்படுவது நோயாளியின் மன நிலையே ஆகும்.

வெள்ளைப் புள்ளிகள் யாருக்காவது உடலில் தோன்றியிருந்தால் மற்றவர்களின் பார்வையிலே அவர் தீண்டத்தகாதவராகி விடுகிறார். அடுத்தவர்களின் அருவருப்புக்குள்ளாகி விடுகிறார். அவர் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டவராகி விடுகிறார். பேருந்தில் பக்கத்தில் உட்காரக்கூட பறர் தயக்கம் காட்டுவது உண்டு. உணவகங்களிலேஅவர் பல இடங்களிலே அனுமதிக்கப்படாத நிலையும் உண்டு. அனுமதிக்கப்பட்ட உணவகங்களில் தன் பணத்தை செலவு செய்து சாப்பிடுவதற்குக்கூட தயங்கிச் சாப்பிட வேண்டியநிலை.

சமூகத்தின் சாதாரண நடைமுறை வாழ்விலேயே இத்தனை சிக்கல என றால் அவர்களின் திருமணம் எனறால் கேட்கவே வேண்டாம். அழகு, உடல் நலம், பணம், கல்வி, வேலை போன்ற எல்லாவற்றிலும் நிறைவடைந்துள்ளவர்களுக்கே திருமணத்தில் பல தடைகள் ஏற்படும்போது இவர்களுக்கு கேட்கவே வேண்டாம். இன்னும் ஒரு படி மேலே யோசித்தால் பெற்றோர்கள் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு இந்த வெள்ளைப் புள்ளிகள் இருந்தாலே மகளுக்கு திருமணம் என்பது வெறும் கனவாகவே முடிந்து விடுகிறது.

இதற்கெல்லாம் தீர்வே இல்லையா? வெள்ளைத் தழும்புகளுக்கு மருந்தே கண்டுபிடிக்கவில்லையா என்று கேட்டால் நிச்சயமாக இதற்கு அகுபங்சர் மருத்துவத்தில் தீர்வு உண்டு.

அகுபங்சர் மருத்துவத்தில் ஒவ்வொரு உறுப்புக்கும் குணம் உண்டு, நிறம் உண்டு.

பஞ்ச மூலகங்களின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள நமது உடலில காற்றை இருப்பிடமாகக்கொண்டுள்ள உறுப்புகள் இரண்டு. அவை நுரையீரலும், பெருங்குடலும். இவற்றிற்குரிய நிறம் காற்றிற்கு நிறம் இல்லை அல்லது வெண்மை என்று கொள்ளலாம்.

இதற்குரிய குணம் எதுவென்று பார்த்தால் துயரம் துயரம் அல்லது துக்கம் நெஞ்சை அடைக்கும்போது விம்மல் ஏறபடுகிறது. நுரையீரலில நாம் சுவாசிக்கும் காற்றுக்கு அங்கே



தடை ஏற்படுகிறது. நுரையீரலில் காற்று தேக்கம் கொள்கிறது. மேகத்தில் கலந்து நீரைப் பொழிய வைக்கக் கூடிய காற்று ஒரே இடத்தில் சுழன்று கொண்டிருக்கிறது. காற்று தேக்கமடைந்திருக கிறது என்பதை நம் உடலில் வெள்ளை நிறம் தேங்கியிருப்பதைக் கொண்டே நாம் தீர்மானித்து விடலாம். மேலும அகுபங்சர் மருத்துவத்தில் நம் உடலைப் போர்த்தியிருக்கும் தோலை நிர்வகிப்பதும் நுரையீரலின் வேலையாகும். அகுபங்சர் நாடிப் பரிசோதனையில் ஒரே நொடியில் நாம் தெரிந்து கொள்ளலாம். நுரையீரலின் இயக்கத்தின் தேக்கத்தை ஸ்கேன் ரத்தப் பரிசோதனை, எக்ஸ்ரே போன்ற எந்தப் பரிசோதனையும் இல்லாமல் ஒரே நொடியில் தெரிந்து ஒரு சில நிமிடங்களில் சிகிச்சையைத் தொடங்கி விடலாம். அகுபங்சர் சிகிச்சை செய்யும் போது இத்தகைய நோயாளிகளுக்கு இயற்கையாகவே சளித்தொல்லை, மூச்சுப் பிரச்சினை, மலச்சிக்கல் போன்ற உடல் உபாதைகளும் இந்த நோயாளிகளுக்கு இயற்கையாகவே அமைந்திருக்கும். துயரம், அழுத்தம், பிடிவாதம், விம்மல் குணங்களும் குறைந்து வாழ்வில் மகிழ்ச்சியுடன் பிறரோடு கலந்து உறவாடக்கூடிய மன நலனும் உடல்நலனும் ஒரு சேரப் பெற்றவர்களாக தம்முடைய வாழ்க்கையை தொடங்கக கூடியவர்களாக இருப்பார்கள. இரண்டு கைகளையும் கோர்த்தால் ஆள் காட்டி விரல் எந்த இடத்தில் படுமோ அந்த இடத்தில் அமைந்துள்ள நுரையீரல் சக்தி நாளத்தின் 7 வது புள்ளி. இந்தப் புள் ளியில் மாதம

**டாக்டர்**
**எம்.எஸ்.உதுமான் அலி**

ஒருமுறை அழுத்தம் கொடுத்து வருவதன் மூலமே வெண் குஷ்டம் எனப்படும் வெள்ளைத் தழும்புகளை விரட்டி வெற்றி காணலாம். இன்னும் நாடிப் பரிசோதனை செய்து சிகிச்சை எடுத்தால் இத்தகைய நோயா ளிகள் உலகில் வெற்றியாளர்கள் என்பது நிச்சயமான ஒன்று. □

### விபத்தில் இருவர்பலி

(கொழும்பு)

புறக்கோட்டை போதிராஜ மாவத்தையில் நேற்று அதிகாலை இடம் பெற்ற பஸ் விபத்தில் 2பேர் உயிரிழந்துள்ளதுடன்,7பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மினுவாங்கொடையில இருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் இப்பகுதியில் கரை ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்ட பஸ் ஒன்றுடன் மோதியதில், அந்த பஸ் உருண்டு வந்து பாதையில் இருந்தவர்கள் மீது ஏறியதால் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் சிறுவனும், முதியவர் ஒருவருமே உயிரிழந்துளளனர். காயமடைந்தவர்கள் அனைவரும் பயணிகள் என புறக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (தி-61)

# சாத்வீகப் போரின் மகிமையை உலகறியச் செய்த உத்தமன் திலீபன்

**அரசறிவியல் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் அரசண்ணா**

(யாழ்ப்பாணம்)

உலக வல்லரசுகளில் ஒன்றாகத் திகழ்கின்ற இந்தியாவுக்கு எதிராகச் சாத்வீகப் போரைத் தொடுத்ததன் மூலம், சாத்வீகப் போராட்டத்தின் மகிமையையும், மேன்மையையும் உலகறியச் செய்த பெருமை மிக்க வீரனாக தியாகி திலீபன் திகழ்கின்றான்.

சர்வதேச நாடுகள் இங்கு வந்து, எமது போராட்டத்தை நசுக்கும் முயற்சிகள் முனைப்புப் பெற்றுள்ள இவ்வேளையில், தியாகி திலீபனின் முன்னுதாரணம் எமக்கெல்லாம் படிப்பினையாக அமைந்துள்ளது.

இவ்வாறு, தமிழீழ விடுதலைப் புலிகளின் தூயவன் அரசறிவியல் பயிற்சிக் கல்லூரியின் விரிவுரையாளரான அரசண்ணா, நேற்றைய தினம் நல்லூரில் அமைந்துள்ள தியாகி திலீபனின் நினைவுத் தூபியடியில் இடம்பெற்ற 16ஆம் ஆண்டு நினைவுதின வைபவத்தில் ஆரம்பவுரையாற்றும் போது குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஆலோசகரும் ஆக்க இலக்கிய கர்த்தாவுமாகிய செம்பியன் செல்வன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பொதுச் சுடரை தமிழீழக் கல்விக் கழகத் துணைப்பொறுப்பாளர் அருண் மாஸ்டரும், தமிழீழத் தேசியக் கொடியை யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து, ஈகச் சுடரினை திருமதி கணபதிப்பிள்ளை ஏற்றி வைக்க, தியாகி திலீபனின் திருவுருவப் படத்திற்கு லெப்.அருச்சுனாவின் தந்தை சதாசிவம் மாலை அணிவித்தார்.

பாடசாலை மாணவர்கள், பொது மக்கள், போராளிகள், அரச பணியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்ட இந் நிகழ்வில் அரசண்ணா தொடர்ந்தும் உரையாற்றுகையில்,



தனது சாத்வீகப் போரின் மூலம், உலகத்தின் பார்வையைத் தமிழர் பக்கம் திசை திருப்பியவன் தியாகி திலீபன். ''மக்கள் புரட்சி வெடிக்கட்டும்.மக்கள் ஒரு நாள் பொங்கியெழுவார்கள்'' என்று திலீபன் தூரதிருஷ்டியுடன் 16வருடங்களுக்கு முன்னர் உரைத்தது இன்று யதார்த்தமாகியுள்ளது.

மக்களுக்காக மக்களுடனே வாழ்ந்த மாவீரன் திலீபன். மக்கள் சக்தி மாபெரும் சக்தி என்பதை உலகிற்கு உணர்த்தி மக்களையும் போராட்டத்தையும், புலிகளையும் மக்களையும் பிரிக்க முடியாத பிணைப்பிற்குள்ளாக்கிய பெருமை திலீபனுக்கே உரியது என்றார்.

இந்நிகழ்வில், தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சீ.வி.கே. சிவஞானம், தலைவர் ஆ.சிறில் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (உ-16,7)

### சுற்றாடல் அதிகார சபையின்

# எதிர்காலத் திட்டங்கள் குறித்த 5 நாள் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

சுற்றாடல் அதிகார சபையின் எதிர்காலத் திட்டங்கள், கடமைகள் குறித்தான 5நாள் பயிற்சிப் பட்டறை நேற்று யாழ்.செயலகத்தில் ஆரம்பமானது.

உள்ளூராட்சி உதவி ஆணையாளார் எஸ்.கிருஷ்ணசாமி தலைமையில் ஆரம்பமான இப் பயிற்சிப் பட்டறையில் யாழ்.அரசாங்க அதிபர் எஸ்.பத்மநாதமன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

உள்ளூராட்சித் திணைக்களம் மற்றும் சுற்றாடல் அதிகாரசபை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்ட இப் பயிற்சிப் பட்டறையில் சுற்றாடல் அதிகார சபையின் ஆலோசகர் பி.கீர்த்திரட்ணாயக்க கருத்துரை வழங்கினார். (உ-4)

### திணசரி தியானம்

ௐ

**கடவுளிடம் ஈடுபாடு**

ஜாதி முறையை இறைவனிடம் அசைக்க முடியாத ஈடுபாடு கொள்வதாகிய ஒரே வழியில்தான் அகற்றமுடியும் பக்தர்கள் எந்தக் குறிப்பிட்ட ஜாதியையும் சேர்ந்தவர்கள் அல்ல. இறையன்பின் மூலம் மனிதனின் மனம், உடல், ஆன்மா ஆகியவை சுத்தப்படுகின்றன. சைதன்ய மகாப்பிரபும் நித்யானந்த சுவாமிகளும் ஹரியின் புகழைப் " பல இங்களிலும் பரப்பி அவரது பெருமையையும் பக்தியின் சிறப்பையும் எடுத்துக்காட்டினார்கள். பக்தியின் மூலமாக யாரும் தூய்மை பெறலாம். இறைவனை உணரலாம்.

சுவாமி சிவானந்தர்

### கடந்த மாதம் மட்டும் முள்ளியவளை ஆஸ்பத்திரியில்

# 6 654 பேருக்குச் சிகிச்சை

(மருதங்கேணி)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையில் கடந்த மாதம் 6ஆயிரத்து 654 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களில் வெளிநோயாளர் பிரிவில் 4 ஆயிரத்து 539 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இங்கு காய்ச்சலுக்கு ஆயிரத்து 129 பேரும், சிரங்குக்காக 533 பேரும், குருதிச்சோகை நோய்க்காக 293 பேரும், மலேரியாக் காய்ச்சலுக்காக 94 பேரும், வயிற்றோட்டத்திற்காக 23 பேரும் கடந்த மாதம் சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்தியசாலைப் புள்ளி விபரங்கள் தெரிவித்துள்ளன. (உ-35)

## காவல்துறை...

கோரியுள்ளதாக அவ் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகள் தங்கள் காவல்துறையை அங்கீகரிக்குமாறு கோரியிருப்பார்கள் என்பதற்கு ஆதாரமாக அண்மையில் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனால் திறந்து வைக்கப்பட்ட காவல்துறையின் நடுவப் பணியகத்தையும் எதிர்வரும் நவம்பர் மாதம் கிழக்கு மாகாணத்தில் காவல்துறை நடுவப் பணியகம் திறந்து வைக்கப்படவுள்ளமையையும் அந்த ஊடகங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

காவல்துறையை அங்கீகரிக்குமாறு கோருவது போன்று வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நிலப் பங்கீடு தொடர்பரன அதிகாரங்கள் தமக்கு அளிக்கப்பட வேண்டுமென்றும் விடுதலைப் புலிகள் கோரியுள்ளனராம்.

இதேவேளை, அரசாங்கம் விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பித்திருந்த இடைக்கால நிர்வாக சபை யோசனைகளில் காவல்துறை, நிலம் மற்றும் நிதி விவகாரங்கள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை என்றும், விடுதலைப் புலிகளின் மாற்றுத் திட்ட வரைபிலேயே இவை முக்கிய இடம் பெற்றிருப்பதாகவும், சுட்டிக் காட்டியுள்ள ஆங்கில ஊடகங்கள் வெளிநாடுகளில் இருந்தும் உதவி வழங்கும் நிறுவனங்களிடம் இருந்தும் கிடைக்கும் வடக்குக் கிழக்கு புனர்வாழ்வுப் பணிகளுக்கான நிதியை தாமே நேரடியாகப் பெற்றுச் செலவு செய்யும் அதிகாரத்தையும் விடுதலைப் புலிகள் தங்களது திட்ட வரைபில் சேர்த்துள்ளதாகவும் தெரிவித்துள்ளன. (ம)

## வட அயர்லாந்து...

புலிகள் அரசாங்கத்திடம் சமர்ப்பிப்பர்.

கடந்த மாதம் பாரிசில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் ஒன்றில் தயாரிக்கப்பட்ட இந்த மாற்று யோசனைகள் தற்போது விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது,அனேகமாக, தமிழ்ச் செல்வனின் வட அயர்லாந்துப் பயணத்துக்கு முன்னர் இந்த யோசனைகள் நோர்வே ஊடாக அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மீண்டும் சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வரும் இந்தச் சந்தர்ப்பத்தில், வெளிநாடுகளில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கு உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (த)

## ஹெல்கீசன்...

யும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இச் சந்திப்பை அடுத்து விடுதலைப புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும் சந்தித்துப் பேசவுள்ளார்கள். (ம)

## மட்டு...

வெட்டுக்காயங்களுக்கு இல்க்கான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை நேற்றுக்காலை 7.45 மணியளவில் உப்போடையில் உள்ள தனது வீட்டில் இருந்து மேசன் தொழிலுக்குச் சென்று கொண்டிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணி முன்னாள் உறுப்பினரான பற்குணம் எனப்படும் தங்கத்துரை நவநீதன்(வயது 27) பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முன்பாக வைத்து அடையாளம் காணமுடியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைகள் தொடர்பில் மட்டக்களப்பு மாவட்டப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ)


### புத்தகம் கட்டுநர் தேவை

பில் புத்தகங்கள் மற்றும் புத்தகங்கள் என்பவற்றை கட்டுவதில் (பைபிண்டிங்) அனுபவமுள்ள பெண்கள் தேவை. சுய விபரத்துடன் 19.09.2003 வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு

**வலம்புரி**

இல.15. வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(வைத்தீஸ்வரக் கல்லூரி அருகாமை)

என்னும் முகவரிக்கு நேரில் சமுகம் தரவும்.

ஆளணி முகாமையாளர்



# GEOGRAPHY

**BY :- J.JEYAGANESH**

**A/L 2004,2005**

வகுப்புக்கள் நடைபெறுகின்றன

U:E:C கல்வி நிலையம்
கச்சேரி நல்லூர் வீதி, யாழ்.
புவியியல் கல்லூரிகள்
ஓட்டுமடம் வீதி, யாழ்.
சோடாக் கொம்பனி ஒழுங்கை, மல்லாகம்.

Note:- மல்லாகத்திலும் ஓட்டுமடத்திலும் ஆண்டு 11 மாணவர்களுக்கான சமூகக்கல்வி வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

(7470)



# "இளம் கண்டுபிடிப்பாளர் விருது - 2003"

## ("Young Inventor Award - 2003")

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் தூய விஞ்ஞான பிரிவு (பிரிவு - A)

A G Sarma & Co

ஆதரவுடன் உயர்தர விஞ்ஞான பாடசாலை மாணவர்களிற்கிடையே மேற்படி போட்டியை நடாத்தவுள்ளது.

இப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்களிற்கான கலந்துரையாடல்

| வலயம் | இடம் | காலம் |
|---|---|---|
| யாழ்ப்பாணம், வலிகாமம், தீவகம் | பௌதிகவியல் துறை யாழ்.பல்கலைக் கழகம் | 19.09.2003,காலை,10.00மணி |
| வடமராட்சி | வட இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை | 17.09.2003, காலை,9.00மணி |
| தென்மராட்சி | சா/இந்துக் கல்லூரி,சாவகச்சேரி | 17.09.2003, காலை, 12.00மணி |

Sponsored by;

A G Sarma & Co.
Charted Accountants

Auditing,Tax Consultation & Planning, Management Consultancy, Book Keeping, System Evaluation & Updation, Financial Guidance and Assistance, & Banking Services

117,Bandaranayakae Mawatha
Colombo - 12

Tel.No : 01-2435666
Fax : 01-2338028
E.Mail : agsharma@slt.lk

Secretary
Jaffna Science Association Section - A

(7601)



# எங்கள் அதிபருக்கு அகவை அறுபது

உயர்திரு.

## கார்த்திகேசு நடராசா B.A Dip in Ed

அதிபர்
(யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி., சுழிபுரம்)



பண்ணாகம் மெய்கண்டான் பாரினிலே
மேன்மையுற
பகலிரவாய் பாடுபட்ட எங்கள் அதிபரின்
சேவைதனை பாராட்டி விழா எடுக்கும் இந்
நாளில்
அகிலத்தில் நீடூழிவாழ்கவென அகம் கனிந்து
நன்றியுடன் வாழ்த்துகின்றேன்

மனமார வாழ்த்தும்
திரு. பா.குமரேஸ்வரன்

பண்ணாகம்
சுழிபுரம்

(7468)



நாளில்
அகிலத்தில் நீடூழிவாழ்கவென அகம் கனிந்து
நன்றியுடன் வாழ்த்துகின்றேன்

பண்ணாகம்
சுழிபுரம்

மனமார வாழ்த்தும்
திரு. பா.குமரேஸ்வரன்
(7468)



Chartered Accountants
Auditing, Tax Consultation & Planning, Management Consultancy, Book Keeping, System Evaluation & Updation, Financial Guidance and Assistance, & Banking Services

117, Bandaranayakae Mawatha
Colombo - 12

Tel.No : 01-2435666
Fax : 01-2338028
E.Mail : agsharma@slt.lk

Secretary
Jaffna Science Association Section - A
(7601)



# உங்கள் வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்




- கொள்ளைக்காரனின் கத்திக்குத்துக்குப் பலியான திருநெல்வேலி இளைஞன்.
- மீண்டும் யசூஷி அகாஷி தூது.
- தந்திரமாகக் காய் நகர்த்தும் பிரதமர் ரணில்.
- வியாசரின் பதில்கள்.
- செங்கை ஆழியானின் ஈழராஜா எல்லாளன் (தொடர் நவீனம்)
- பொன்.கணேசமூர்த்தியின் கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை)

இன்னும் பற்பல...

வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

விலை ரூபா 14.00

வலம்புரியின் வாரமலர் பக்கங்கள் - 20 விலை :-14.00

## சங்கு நாதம்

15-21 செப். 2003

Sankunatham


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16 .09.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.